# சத்திய வேத பாதுகாவலன்

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
phone: No. 100.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

81-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1956-ம் ஆண்டு சித்திரை மாதம் 19-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 15-ம் இலக்கம்


## சுதேச வர்த்தமானம்

### புதியசெனற்றர்கள்

திரு. ஆர். எஸ். வி. பௌலியர், சேர் கந்தையா வைத்தியநாதன் ஆகியஇருவரும் செனற்சபைப்பதவிகளை இராசிநாமாச் செய்தமையாலே இவர்களிடமாகத் திரு. சந்திரதாசா விஜெசிங்க, நீதிமந்திரியார் திரு. எம். டபிள்யு. எச். டி சில்வா, கியு. சி. எனும்இருவரும் புதியசெனற்றர்களாக நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றனர்.

### நியமன அங்கத்தவர்கள்

சனப்பிரதிநிதிகள்சபையின் நியமன அங்கத்தவர்களாகப் பின்வரும் ஆறுவரும் கவர்னர்-ஜெனறலால் நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றனர்.

(1) திரு. ஆர். சிங்கிள்ரன்-சால்மன், சி. பி. ஈ., (2) திரு. ஜோண் ஆர். முறே, (3) திரு. றொஸ்லின் கொச், ஓ. பி. ஈ. (4) திரு. ஆர். எஸ். வி. பௌலியர், சி. பி. ஈ., (5) டக்றர் எம். பி. டி. ருஹ்மன், எம். பி. ஈ. (6) திரு. ஆர். பி. கடம், ஜே. பி., யு எம். இவர்களில் மூவர் ஐரோப்பிய பிரதிநிதிகளும், இருவர் பேர்க்க பிரதிநிதிகளும், ஒருவர் மலாயப் பிரதிநிதியுமாவர்.

### புதிய உதவிமந்திரிமார்

புதியபிரதமர் தமது உதவிமந்திரிமாராகத் தெரிவுசெய்துள்ள எழுவரும் சென்றசனிக்கிழமைகாலை இராணி மாளிகைசென்று கவர்னர்-ஜெனறல் சேர் ஒலிவர் குணதிலகஅவர்கள்முன்னிலையில் விசுவாசப்பிரமாணஞ் செய்துகொண்டார்கள். அவர்களின் நாமங்கள் வருமாறு:

1. திரு. பி. தென்னக்கூன் — நீதி உதவிமந்திரி.
2. திரு. பி. பி. ஏ. விரக்கூன்—கல்வி உதவிமந்திரி.
3. திரு. ஜே. சி. முனசிங்க—கைத்தொழில்-கடற்தொழில் உதவி மந்திரி.
4. திரு. ரி. பி. சுபசிங்க—பாதுகாப்பு உள்நாட்டுவிவகார உதவிமந்திரி.
5. திரு. பி. பி. ஜி. கலுகல-சுகாதார உதவிமந்திரி.
6. திரு. கே. எம். பி. இராஜரட்ண—தபால்-வானொலி - செய்தி உதவி மந்திரி.
7. திரு. லக்ஷ்மன் இராசபக்ஸி—வர்த்தகஉதவிமந்திரி.

### சிங்கக்கொடி திருடியவர்கள்

சென்றசுதந்திரவிழாத் தினமன்று மாந்தைக்காரியாதிகாரியின் காரியாலயத்தில் ஏற்றப்பட்டிருந்த சிங்கக்கொடியைத் திருடினர்களென்றும், அத்துமீறி உட்பிரவேசித்தார்களென்றும் குற்றஞ்சாட்டி எம். நல்லையா, கே. நடராஜா, கே. பசுவதிஎனும் மூவர்மீதும் மன்னார்நீதிஸ்தலத்தில் தொடரப்பட்டிருந்தவழக்கு சென்றபுதன்கிழமை விசாரணைக்குள்ளாய் எதிரிகள்மூவரும் குற்றவாளிகளாகித் தனித்தனி மூன்றுமாதசிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

### நிலாவரை நீர்ப்பாசனவசதி

ஏறக்குறைய இருஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட நிலாவரை நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் முன்னிலும்பார்க்க நால்மடங்கு விஸ்தீரணமான காணிகளுக்குத் தற்போது நீர்ப்பாய்ச்சுவ்வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. நவக்கிரியின் அருகாமையிலுள்ளபகுதியிலே ஆரம்பத்தில் 25 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர்வழங்கப்பட்டது. இப்போது ஏறக்குறைய 100 ஏக்கர் நிலத்துக்குத் தண்ணீர்வழங்கப படுகிறது. ஈவினை, புத்தூர்மேற்கு ஆகியகிராமங்களுக்கும் விரைவிலே நீர்ப்பாய்ச்சும்வசதி கிடைக்கக்கூடுமென்று சொல்லப்படுகிறது.

### மூவருக்குத் துப்பாக்கிச்சூடு

சனப்பிரதிநிதிகள்சபையிலே யாழ்ப்பாணத்தொகுதிக்குப் போட்டியிட்ட திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. ஏ. விசுவநாதன்என்னும் இருஅபேட்சகர்களினதும் ஆதரவாளர்களிடையே சென்றவியாழக்கிழமை சுண்டிக்குளியில் நடைபெற்ற ஓர்சச்சரவில் திரு. ஏ. விசுவநாதனின் ஆதரவாளர்கள் மூவர் துப்பாக்கிக்காயங்களுடன் யாழ்ப்பாண அரசினர்பெரியஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். திரு. பொன்னம்பலம்அவர்களின் ஆதரவாளரான திரு. சி. கனகையாவின்வீட்டிலும், திரு. விசுவநாதனின் வீட்டிலும் கற்கள்வீசப்பட்டதிலிருந்து இந்தத்தகராறு ஆரம்பமானதெனத் தெரியவருகிறது. ஈற்றில், ஆர். கணேசரத்தினம், என். மனோகரன், கே. கனகசிங்கம் எனும்மூவரும் திரு. கனகையாவின்உறவினரான செல்லையா சோமசுந்தரம்என்பவரால் துப்பாக்கிகொண்டு முழங்காலுக்குக்கீழ் சுடப்பட்டுக்காயமடைந்தார்களெனச் சொல்லப்படுகின்றது. இவர்கள்மூவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். ஜி. காசையா, எஸ். சோமசுந்தரம் எனுமிருவரும் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பொலிஸ் காவலில் இருந்துவருகிறார்கள்.

### எதிர்பாராத விபத்து

கொழும்பிலிருந்து குதிரைப்பந்தையம் பார்ப்பதற்கென்று ஜனுப் டி. எம். அகமது தீன் என்பவர் நுவரெலிசென்றிருந்தார். அங்கே அவர் சென்ற வெள்ளிக்கிழமை செலுத்திச்சென்ற மோட்டர்சைக்கிளும், கார்ஒன்றும் நனுஓயாவுக்குச்சமீபமாய் மோதிக்கொண்டதன்விளைவாக அவர் தலையில் பலத்தகாயம் ஏற்பட்டு, நுவரெலிஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிறிதுவேளையால் இறந்துபோயினர்.

### ஸ்ரீலங்கா கப்பற்கம்பெனி

இலங்கை-இந்திய துறைமுகங்களுக்கு நடத்தப்பட்டுவரும் கரைதுறைக்கப்பற்சேவை படிப்படியாக இலங்கைமயமாகிக்கொண்டுவருகிறது. ஸ்ரீலங்கா கப்பற்கம்பெனிஎன்ற இந்தக் கப்பற்சேவைக்கம்பெனியானது இலங்கையிலுள்ள ஹோர்ஸ்ற், ஹியுகோ, மாக்ஸ்எனும் மூன்று கப்பல்களையும் பொறுப்பேற்றுக் குத்தகைமுறையிலே போக்குவரத்துநடத்திவருகின்றது. இந்தப்போக்குவரத்துச்சேவை கொழும்பு—தூத்துக்குடி, கொழும்பு—கொச்சி—பம்பாய்எனும் துறைமுகங்களுக்கிடையே நடைபெற்றுவருகிறது. தூத்துக்குடிக்கு வாரத்தில்இருமுறை மாத்திரம் போக்குவரத்து நடைபெறுகின்றது. தூத்துக்குடிக்கும், கொழும்புக்குமிடையே ஏற்றியிறக்கப்படுவன கருவாடு, வெல்லம், மிளகாய், வெங்காயம், பனங்கிழங்கு என்பனவே.

### "யாழ்தேவி" எக்ஸ்பிறெஸ்

இலங்கை அரசாங்கறெயில்வேப் புதியநேரஅட்டவணை நிகழும்சித்திரை மாதம் 23-ந்திகதியன்று நடைமுறைக்கு வரவிருக்கிறது. பகல்வேளையிற்செல்லும் நீண்டதூர இருஎக்ஸ் பிறெஸ்றெயின்களே புதியநேரஅட்டவணையில் விசேஷப்பட்டனவாகும். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் "யாழ்தேவி" யும், ஆங்கிருந்து பதுளைக்குச்செல்லும் "உடறெட்ட மெனிக்கா"வுமே அவ்விருஎக்ஸ்பிறெஸ் றெயின்களுமாகும்; "யாழ்தேவி" அன்றுதினம் கொழும்பு, கோட்டைஸ்ரேஷனிலிருந்து காங்கேசன்துறைக்குக் காலை 9-30 மணிக்கும், பின்னர் காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கு அன்றுபிற்பகல் 2-05 மணிக்கும் புறப்படும். இது வழக்கமானநேரத்திலும் 3 மணிநேரம் குறைவாகும். புதிய எக்ஸ்பிறெஸ் பிரயாணம் பலமணிநேர தாமதத்தை மிச்சப்படுத்துமென்றும், காரில்செல்வதுபோல இப்பிரயாணம் வசதியாயிருக்குமென்றும் றெயில்வே ஜெனறல்மனேஜர் கூறுகின்றார்.

### மணவாளிமுன் மணவாளன்

போரதனையிலே அண்மையில் மணஞ்செய்துகொண்டபுதியதம்பதிகள் இருவர் கலவெல்லை-ஹென்டெசா வீதிநீளம் நடந்து தங்கள்வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, மனைவி கண்காண அவள் கணவன் ஓர்விபத்துக்குள்ளாய் இறந்துபோனபரிதாபகரமான ஓர்செய்திவெளிவந்துள்ளது. மணவாளனை பி. ஜி. குணேரிஸ்என்பவன் அவ்வீதியிலுள்ள பாலத்தில் தனதுமணவாளிக்கு முன்னோடியாக வழிநடந்துசென்றபோது, வானொன்றால்மோதுண்டு அவ்விடத்திலேயே இறந்துபோயினன்.

### மாமியும் மருகரும் பிரதிநிதிகள்

பாராளுமன்ற பொதுத்தேர்தலின் முடிபாய்ப் புதியசனப்பிரதிநிதிகள் சபையிலே புருஷனும், மனைவியுமாகத் தம்பதிகளானபிரதிநிதிகளாய் நால்வர்தெரியப்பெற்றிருப்பதாகச் சென்றவாரம் இப்பத்திரிகையில் செய்திவெளிவாலாயிற்று. இவர்களைத்தவிரப் புதியசனப்பிரதிநிதிகள் சபையிலே மாமியும், மருகருமான இருபிரதிநிதிகளும் இருக்கின்றார்கள். மிரீகாமப் பிரதிநிதியான திருமதி விமலா விஜயவர்த்தனவும், மாவனல்லைப்பிரதிநிதியான திரு. சி. ஆர். பெலிகம்மனவுமே அவ்விருவருமாவர்.

### பூனையின் தூரப்பிரயாணம்

தொடங்கஸ்லந்தையிலே மருத்துவதாதியாகக் கடமைபார்த்துவந்த திருமதி யு. பசநாயகஎனும்பெண் சமீபத்திலே அங்கிருந்து பொத்துகரைக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டாள். அவள் தனதுபுதியதானத்துக்குப் புறப்படும்போது தன்னுடைய வீட்டுத்தளபாடங்களுடன் தான்செல்லமாகவளர்த்த 'சுட்டி' என்ற எட்டுவயதுப் பூனையையும், அதன்குட்டிகள் இரண்டையும் ஓர்லொறியில்ஏற்றிக் கொண்டுபோனாள். புதியஇடம்போய்ச்சேர்ந்து ஒருமாதத்தின்பின் சுட்டியையும்காணவில்லை. அதன்குட்டிகளையும் காணவில்லை. ஆனால், சிலவாரங்களின்பின் தாயும், குட்டிகளும் தொடங்கஸ்லந்தையிலே அந்தமருத்துவதாதி வசித்திருந்த பழையவீட்டில் இருப்பதைக் கண்டு அயலவர்களெல்லாம் அதிசயித்தார்கள். இந்தப்பூனை இருகுட்டிகளையுங்கொண்டு பொத்துகரையைச் சேர்ந்த ஹண்டுகலைஎனுமிடத்திலிருந்து தொடங்கஸ்லந்தையைச்சேர்ந்த உடதப்போலாஎனுமிடம்வரையிலுள்ள 22 மைல்தூரமுழுவதையும் நடந்துசென்றே தனதுபழையவீடு போய்ச் சேரலாயிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மனிதன் அப்பத்தினுல் மாத்திரமல்ல..."

( சி. எஸ். நாயகம், ஸ்டேஷன்மாஸ்டர், கெம்பாஸ் — மலாயா )

நமதுஇரட்சகராகியயேசுக்கிறீஸ்துநாதர் வனாந்தரத்திலே நாற்பது இரவும், பகலுமாக உபவாசமாயிருந்தபின்னர் அவருக்குக் கடும்பசிஉண்டாயிற்று. அதனுல் அவர் அப்படியே பசிக்களைகொண்டு வாடிச்சோர்ந்துபோய் இருக்கும்போது, சோதனைசெய்வோனுனசாத்தான் அவரண்டைசென்று, "நீர் சர்வேசுரனுடைய சுதனுனல் இந்தக்கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றுன்" (மத். 4:3). அதற்குஅவர் மாறுத்தரமாக: "மனுஷன் அப்பத்தினுலே மாத்திரமல்ல, சர்வேசுரனுடைய வாயினின்றுபுறப்படுகிற எந்த வாக்கியத்தினுலும் பிழைக்கிறுனென்று எழுதப்பட்டிருக்கிறது என்றுர்" (மத். 4:4). ஆம், நம்முடைய சரீரபோஷணைக்கு — நாம் உயிர்வாழ்வதற்குச் சரீர போசனம் நமக்கெல்லாம் எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவாக வேதவாக்கியம்—சீவியவார்த்தை நமது ஆன்மாவுக்கு இன்றியமையாதது. இந்த வேதவாக்கியங்கள் — சீவியவார்த்தைகள் விதைகளுக்கு ஒப்பானவையென்றும், அவற்றைக்கேட்போரின் இருதயங்கள் பூமிக்கு — வயல்நிலங்களுக்கு ஒப்பானவையென்றும் யேசு நாதர் குறிப்பிட்டிருக்கிறுர். நமக்கு ஓர் படிப்பனையாக ஓர்உவமையைக்கொண்டும் இதைத் தெரிவித்திருக்கிறுர். அதாவது,

ஓர்நாள்அவர் கலிலேயாக் கடற்கரையிலே நின்றுர். அப்பொழுது திரளான சனங்கள் அவரிடத்தில் வந்துகூடினமையால் அவர் கடலில் ஓர்படகின் மேல்ஏறி உட்கார்ந்தார். சனங்களெல்லோரும் கடலோரமாய்க் கரையிலிருந்தார்கள். அப்போதுஅவர் யாவர் செவிகளிலும் நன்றுகத்தொனிக்கும்படி விதைவிதைக்கிறவனின் உவமையைத் திருவாய்மலர்ந்தருளினுர். எப்படியெனில், "இதோ, விதைக்கிறவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கிறபோது சில[1] வழியோரத்தில் விழுந்தது. ஆகாயத்துப் பறவைகள்வந்து அதைப் பட்சித்துப்போட்டன. வேறுசில[2] அதிக மண்ணில்லாத கற்பாறைநிலத்தில் விழுந்தது. அதற்கு ஆழமான மண்ணில்லாததினுலே சீக்கிரத்தில்முளைத்தது. ஆனுல், வெயில்ஏறவே அதுகாய்ந்து வேரில்லாதபடியால் தீய்ந்துபோயிற்று. வேறுசில[3] முள்ளுப்பற்றைகள்நடுவில் விழுந்தது. முள்ளுகள்எழும்பி அதை நெருக்கிப்போட்டமையால் அது பலன் கொடாமல்போயிற்று. வேறுசில[4] நல்ல நிலத்தில் விழுந்து வளர்ந்தோங்கி விளைந்து ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாக நற்பலனைத்தந்தது" (மாற். 4 : 1—8). இதுவே அந்த உவமையாகும். இங்கு அவ்விதம் வேதவாக்கியத்தைக் கேட்போரை ஆண்டவர் நான்குவகுப்பினராகப் பிரித்துக் காண்பித்திருக்கிறுர்.

இவர்களில் நாம்எந்தவகுப்பினரைச் சேர்ந்திருக்கிறேமென்பதைக் கவனிப்போம். வேதவாக்கியங்களை—சீவியவார்த்தைகளைப் போதிக்கும்அதிகாரம் பெற்றவர்கள் யார்? திருச்சபை அதிகாரிகளே. கிறீஸ்துநாதர் தமது அப்போஸ்தலர்களைநோக்கி: "பரலோகத்திலும், பூலோகத்திலும் எனக்குச் சர்வஅதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் உலகமெங்கும்போய்ச் சகலசாதிசனங்களுக்கும் உபதேசித்து, பிதாவுடையவும், சுதனுடையவும், இஸ்பிரீத்துசாந்துவுடையவும் நாமத்தினுலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அனுசரிக்கும்படி அவர்களுக்குப் போதியுங்கள்" ( மத். 28 : 18 – 20 ) என்றுசொல்லி இந்தப்பரமதொழிலை — இந்தஉந்நதஉத்தியோகத்தை அப்போஸ்தலர்கள்மூலமாய்த் தொடர்பு முறியாமல் திருச்சபைஅதிகாரிகளுக்கே கொடுத்தருளினுர். இதற்கு அத்தாட்சியும், உறுதிணையும், பெலப்புமாக, "இதோநான் உலகமுடியுமட்டும் எந்நாளும் உங்களோடுகூட இருக்கிறேன்" (மத். 28 : 20) என்று வாக்குமளித்தார்.

ஆகவே, முன்னர்கூறிய உவமையின்படி ஓர்ஞான அதிகாரி—ஓர்குருவானவர் வாக்கியங்களை விதைக்கிறவர். பிரசங்கநேரமே விதைப்புநேரம். அவர் வாயினின்று பிறக்கும் வாக்கியங்களே அந்தச் சீவியவார்த்தைகள். பூசைவேளையிலே அவரது பிரசங்கத்தின் மூலமாய் அவர்வாயினின்றுவரும் திவ்விய வார்த்தைகளைக்கேட்கும் விசுவாசிகளே அந்தப்பூமி அல்லது வயல் நிலம். எனவே, ஓர்குருவானவர் ஞாயிறு, கடன்திருநாட்களிலே பூசைவேளையில் செய்யும் பிரசங்கத்தின்போது விசுவாசிகள் நடந்து கொள்ளும் விதம் என்னநடபடியில்இருக்கிறதென்பதைச் சற்றேஆராய்ந்துபார்ப்பது நலமாகும்.

நம்ஒவ்வொருவரதும் அனுபவத்தில் கண்கண்ட சாட்சியாய் நாம் பூசைவேளையில் அவதானிப்பதென்ன? குருவானவர் சுவிசேஷம்வாசித்து முடித்துப் பிரசங்கம் தொடக்குமுன்னரே ஒருசிலர் படைபோலத்திரண்டு கோவிலுக்குவெளியேபோகக் காலெடுக்கிறுர்கள். இவர்கள் வெளியேநின்று செய்வதென்ன? சுருட்டு, சிகறெற், தாம்பூலம் கையிலெடுக்கிறவர்களும், ஊர் நயநட்டம் பேசுகிறவர்களுமாய்நின்று இவ்விதமே குருவானவர்செய்யும் பிரசங்கத்தைச் சிறிதளவேனும் பொருட்படுத்தாது வீணே நேரத்தைக்கழிக்கிறுர்கள். வேறுசிலர் கோவிலுக்குள்ளேயே இருந்தவண்ணம் கண்ணயர்ந்து விழுகிறுர்கள். இன்னுஞ்சிலர்—விசேஷமாகப் பெண்பாலார் அக்கம்பக்கமாய் இருக்கும் தங்கள்சிநேகிதிகள், பழக்கமானவர்களுடன் காதுக்குள் மெதுவாக ஏதோஇரகசியம் பேசிக்கொள்ளுகிறுர்கள். வேறுசிலர் அங்குமிங்குமாகப் பராக்காயிருக்கிறுர்கள். இத்தனைபேரும் குருவானர்செய்யும் பிரசங்கத்துக்குச் செவிசாயாது சும்மா எண்ணுக்கணக்குக்கு மாத்திரம் இருக்கிறுர்கள். "எங்களுக்குக் குருவானவர் என்னபோதிக்கிறது? எங்களுக்கு எல்லாம்தெரியும்; அவரைக் காட்டிலும் எங்களுக்கு இன்னும் கூடத்தெரியும்" என்றுற்போல் நடக்கிறுர்கள்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# நெடுநாளைய ஆவல்

புரொட்டஸ்தாந்த பிரபுஒருவரின் மகன் ஒருமுறை ரோமைநகருக்கு உல்லாசப்பிரயாணமாய்ச் சென்றுன். அன்று திவ்வியநற்கருணைத் திருநாள். அக்காலத்தில் திவ்விய நற்கருணைத் திருநாள் ரோமைநகரில் மிகஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டு வந்தது. ஆகவே, அன்று ரோமைநகர் என்றுமில்லா அலங்காரத்துடன் காட்சியளித்தது. திவ்வியநற்கருணைச் சுற்றுப்பிரகாரம் ஆரம்பமானது. அக்காலவழக்கப்படி பாப்பரசரே நற்கருணைநாதரைக் காத்தேந்திப் பவனிவந்தார். இக்காட்சியைக்காண வீதிகளில் திரள்திரளாகக் காத்துக்கொண்டிருந்த மக்கள்அனைவரும் நற்கருணைநாதர் நெருங்கிவந்தபோது முழந்தாட்படியிட்டுச் சிரங்குனிந்து அவரைஆராதித்தார்கள். ஆனுல், வேடிக்கைபார்க்கவந்திருந்த அந்தவாலிபனே விறைப்பாக நின்றுகொண்டு, "கடவுளாவது, அப்பத்தில் இருப்பதாவது, எல்லாம் சுத்தப் பைத்தியத்தனம்; எல்லோரும் விக்கிரகஆராதனை செய்கிறுர்கள்" என்று எள்ளிநகையாடினுன்.

இந்தவாலிபனின் ஏளனம் நீடிக்கவில்லை. ஏனென்றுல், மறுகணம் ஓர் பெருத்தமாற்றம் ஏற்பட்டது. ஒரு நிமிஷத்துக்குமுன் சற்பிரசாதநாதரை எள்ளிநகையாடியவன் இப்போது தானே முழந்தாளிலிருக்கிறுன். அவனதுகரங்கள் குவிகின்றன. அருவிபோல் கண்களிலிருந்து கண்ணீர்வழிந்தோடுகிறது. நடந்ததுஎன்ன? இப்பெரும்மாற்றத்துக்குக் காரணம்யாது? அவ்வாலிபனே எழுதியிருக்கிறுன்: "சற்பிரசாத கதிர்ப்பாத்திரத்தை நான் அலட்சியமாக நோக்கியபோது திடீரென நமதாண்டவர் விசனமும், கண்டிப்பும் நிறைந்தமுகத்தோடு என்னை உற்றுநோக்குவதைக் கண்டேன்; என்மனம் உடனேமாறியது; மற்றவர்களைப்போல் நானும் முழந்தாளிலிருந்து அவரை ஆராதித்தேன்." பின்பு அவர் தனதுதப்பறைகளைத் தள்ளிவிட்டு உத்தம கத்தோலிக்கரானுர். சிலவருடங்கள்கழித்து ஓர் சந்நியாசசபையில் சேர்ந்து குருவாகும் பாக்கியமும்பெற்றுர். சர்வேசுரனுடைய திராட்சத்தோட்டத்தில் அயராதுஉழைத்து அநேகஆத்துமங்களை யேசுவின்பாதம் கொண்டுவந்துசேர்த்தார். திவ்விய சற்பிரசாதத்தின்மட்டில் அவருக்கு அதிகபக்தி இருந்தது. தமது அன்பின் தேவதிரவிய அநுமானமாகிய நற்கருணையில் யேசுநாதர் அனுபவிக்கும் நிந்தைஅவமானங்களைக் கேள்விப்படும்போது அவரதுஉள்ளம் பெரிதும் வேதனையடையும். இந்த நிந்தை அவமானங்களுக்கெல்லாம் பரிகாரமாகத் தனதுஉயிரையே தகனபலியாகக் கொடுக்கும் பாக்கியம் கிடைக்கவேண்டுமென்று அநேகம் முறை வேண்டினுர்.

ஒருமுறை அவரதுசிரேஷ்டர் அவரைச் சபைன்குன்றுகளிலுள்ள ஓர் வயோதிக குருவானவருக்கு உதவி செய்யும்படி அனுப்பினுர். மெய்வருத்தம்பாராது, கண்துஞ்சாது நமது வாலிபகுரவர் ஆத்தும இரட்சணிய அலுவலை நிறைவேற்றிவந்தார். ஒருநாள் நடுச்சாமமிருக்கும். "அவஸ்தை சுவாமி!" என்று ஓர்ஆள்வந்தான். நமதுவாலிபகுரவர் உடனேபுறப்படத் தயாரானுர். ஆனுல், அவர் அன்று நாள்முழுவதும் கஷ்டப்பட்டு வேலைசெய்தமையால் அவரைப்போகவொட்டாது தடுத்துத் தாமேபுறப்பட்டுப் போனுர் வயோதிகக்குருவானவர். அவர் சென்றபின் ஏதோஆபத்தொன்று அடுத்திருப்பதாக உணர்ந்தார் நமதுவாலிபகுரவர். சன்னலண்டைசென்று கிராமத்தை உற்றுநோக்கினுர். குருவானவரின்வீடும், கோவிலும்கிராமத்திலிருந்து சற்றுத்தூரத்திலிருந்தன. எங்கும் நிசப்தம்நிலவியது. கோவிலிருந்த திசையைநோக்கவே, அங்குவெளிச்சம் காணப்பட்டது. ஆட்களின்நடமாட்டமும் இருப்பதாகஉணர்ந்தார். உடனே விறுவிறென்று கோவிலைநோக்கி நடந்தார். கதவுசற்றே திறந்திருந்தது. மெதுவாக உள்ளே எட்டிப்பார்த்தார். அங்கே அவர் கண்டகாட்சி அவரதுநெஞ்சைப் பெரிதும்கலக்கிவிட்டது. அவரதுஇரத்தம் கொதித்தது. திவ்வியநற்கருணைப் பேழையின்முன் இருதிருடர்கள் நின்றுகொண்டு திவ்வியநற்கருணைப் பாத்திரத்தைஎடுக்க எத்தனித்துக் கொண்டிருந்தார்கள். சுவாமியாருக்கு ஆவேசம்பொங்கிஎழுந்தது. அவர்களை இரும்பின்உறுதிகொண்ட தனது கையால் நசுக்கிவிட அவரால்முடியும். ஆனுல், ஆண்டவரைத் தொடும்கரத்தைப் பலாத்காரச்செயலால் கறைப்படுத்த அவர் விரும்பவில்லை.

சந்தடிசெய்யாமல் பீடத்தையடைந்தார். திருடர்கள் அவரைக்கவனிக்காமல் தங்கள்வேலையில் முனைந்திருந்தார்கள். திவ்வியநற்கருணைப் பாத்திரத்தை வெளியிலெடுக்கும்படி திவ்விய நற்கருணைப் பேழைக்குள் அவர்களில் ஒருவன் கைவிட்டபோது, குருவானவர் திடீரெனப்பாய்ந்து அதைஎடுத்துக் கொண்டார். திருடர்கள் ஒருகணம் திகைத்துவிட்டார்கள். ஆனுல், அங்கு குருவானவரைத்தவிர வேறொருவரும் இல்லாததைக்கண்டு, அவரைத்தாக்கினுர்கள். குருவானவரோ திவ்வியநற்கருணைப் பாத்திரத்தை இருகைகளாலும் நெஞ்சோடுஇறுகச்சேர்த்தணைத்தவண்ணம் பீடத்தோடுசாய்ந்து அசையாதுநின்றுர். திருடர்கள் எவ்விதபிரயத்தனம் செய்தபோதிலும், பரிசுத்த பாத்திரத்தை அவரிடமிருந்து பறிக்க முடியவில்லை. துப்பாக்கிவேட்டுக் கேட்டது. சுவாமியார் கீழேசாய்ந்தார். ஆனுல், பரிசுத்தபாத்திரம் அவரது கரங்களிலிருந்து நழுவாமல் நெஞ்சோடுஅணைத்தபடியே இருந்தது. "தேவனே எனக்குஉதவியாக வாரும்! எனதுஉயிர் பிரிகின்றது!" என்று அவரதுவாய் அரற்றியது.

தெய்வசங்கற்பமாகப் பங்குக்குருவானவரும், அவரோடு உதவிக்குச் சென்றிருந்தவரும் அப்போதுதான் திரும்பிவந்தார்கள். கோவிலில் வேட்டுச்சத்தம் கேட்கவே ஓடோடியும்வந்தார்கள். ஆட்கள்வருவதைக் கண்ட திருடர்கள்ஓட்டம்பிடித்தனர். வயோதிககுருவானவர் பரிசுத்தபாத்திரத்தை அவ்வீரகுரவரின் கரங்களிலிருந்துஎடுத்தார். அவரதுகண்கள் கண்ணீரால்நிறைந்திருந்தன. அவரதுஇதழ்களில் இன்பப்புன்னகை தோன்றியது. "எனதுசீவியகாலத்தின் மகோன்னத நாள் இதுவே; எனதுநெடுநாளைய ஆவல் இதோபூர்த்தியாகப் போகிறது." இவ்வார்த்தைகளோடு அவ்வீரக்குருவின் ஆவலும் பூர்த்தியானது. அவரது ஆன்மாபரலோகத்தைநாடிப் பறந்து சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## ஞாபகார்த்த வீடுகள்

ஸ்பானியதேச பார்சலோனு நகரிலே 1952-ம் ஆண்டு நடந்தேறிய 35-வது சர்வதேச சற்பிரசாதமகாநாட்டின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பெற்ற வீடுகளிலே அங்கு குடிசனநெருக்கமான பகுதிகளில் வசித்திருந்த அறுநூற்றுக்குமேற்பட்ட ஸ்பானிய குடும்பங்கள் கொண்டுபோய்க் குடியேற்றப்பட்டிருக்கின்றன. இந்தவீடுகள் சுகாதார வசதிகளும், மிகக்குறைந்த வாடகையும் உடையனவுமாகும். வீட்டுவேலைத்திட்டம் பூர்த்தியடைந்ததும் எல்லாமாக இரண்டாயிரம் குடும்பங்கள் அவற்றிற்கொண்டுபோய்க் குடியேற்றப்படும். கூடியதொகையான பிள்ளைகளைக்கொண்ட குடும்பங்களுக்கே முதலிடங் கொடுக்கப்படுகிறது.

## பிதாவின் முதற்பூசையில் பிள்ளைகள் பரிசாரகர்

திருச்சிராப்பள்ளி ஆசனக் கோவிலிலே சென்ற பங்குனி 19-ந் திகதி அர்ச். சூசையப்பர் திருநாளன்று மகாவந். ஜேம்ஸ் மெண்டன்கா மேற்றிராணியாரால் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்ற வண. ஏ. சவிரிமுத்து சுவாமியவர்களின் முதற்பூசையின்போது, அகஸ்ரீன், யோசேப் என்னும் அவரது புதல்வர்கள் இருவரும் பரிசாரகராயிருந்து உதவிசெய்யலாயினர். வண. சவிரிமுத்துசுவாமியார் 1911-ம் ஆண்டு றங்கூன்நகரில் பிறந்தார். அங்கு ஓர்பிரபலவர்த்தகராய் விளங்கியிருந்த திரு. அமிர்தஉடையாரே இவரின் தந்தையார். காலகதியிலே இவர் செல்வி மிக்கேலம்மாள் எனும் றங்கூன் நகர இளம் பெண்ணைத் திருமணஞ்செய்து மூன்றுபிள்ளைகளுக்குத் தந்தையாயினர். தற்போது 16 வயதுடைய பிறிஜித்தாவும், 14 வயதுடைய அகஸரீனும், 12 வயசுடைய யோசேப்புமே அம்மூன்றுபிள்ளைகளுமாவர். நிற்க, 1944-ம் ஆண்டு மிக்கேலம்மாள் காலஞ்சென்றபோது அவள் நாயகரின் வாழ்க்கையில் ஓர் பெருந்திருப்பம் உண்டாயிற்று. பர்மாவின் தலைநகரிலே பெரிய வர்த்தகராயிருந்து உயர்ந்த வாழ்க்கைநடத்திவந்த அவருக்கு உலகவாழ்க்கை கசந்துவிட்டது. றங்கூன் உயர்தரகலாசாலையில் கல்விபயின்றுவந்தபோது, தாம் ஓர்குருமடத்துமாணவனுக வேண்டுமென்று கொண்டிருந்த கருத்து இவரில்திரும்பவும் தலைதூக்கியது. அதனுல், தமது பிள்ளைகள் கல்விபயில்வதற்கான ஒழுங்குகளையெல்லாம் இவர்செய்துவிட்டு, மதுரையிலுள்ள அர்ச். இராயப்பரின் ஆரம்ப குருமடத்திற்சேர்ந்து இருவருடகாலம் படித்தபின் திருச்சிராப்பள்ளியிலுள்ள சம்பாவிலுவானவரின் பிரதமகுருமடத்தில்பிரவேசித்து, மூன்றுவருடம் தத்துவசாஸ்திரமும், நான்குவருடம் வேதசாஸ்திரமும்பயின்று, எல்லாமாகப் பதினொருவருடங்களின்பின் தம்முடைய 45-ம் வயதிலே தமது உடன்மாணவர்களான மற்றும் பதினொரு தியாக்கோன்மாருடன் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றுர். இவர் மதுரை மேற்றிராசனத்திலே திருத்தொண்டாற்றிவருவார். தமது முதற்பூசையின்போது இவர் அணிந்துகொண்ட திருஉடைகள் இவரதுமகள் பிறிஜித்தாவின் மேற்பார்வையிலே இவருடையபிள்ளைகளாலே அழகிய வேலைப்பாடுடையனவாய்த் தயாரிக்கப்பட்டிருந்தன.

## வத்திக்கானின் புதியமுத்திரைகள்

அதிதூதரான அர்ச். கபிரியேலின்பிரதிமையைக்கொண்ட மூவினமான ஆகாயத்தபால் முத்திரைகளை வத்திக்கான் தபாற்கந்தோர் பாவனைக்கு வெளியிட்டிருக்கிறது. அக்காலத்திலே கீர்த்திவாய்ந்த இத்தாலிய சைத்திரிகர்மூவரால் அர்ச். கபிரியேல்அதிதூதர் சித்திரிக்கப் பட்டிருப்பது போன்று இந்தமூவினத் தபால்முத்திரைகளிலும் அவர்காணப்படுகின்றார். அவைகள் மூன்றிலும் மெலோஸோ டாபோர்லி, லெயோனர்டோ டா விஞ்சி, பியேற்றோ கவாலினி எனும் மூன்றுசைத்திரிகராலும் வரையப்பட்ட மூன்றுசித்திரங்களிலுள்ள அர்ச். கபிரியேலின் பிரதிரூபங்கள் அமைந்திருக்கின்றன.

## குருப்பட்டம் பெற்றார்

முன்னர் ஓர்கம்யூனிஸ்த அனுதாபியாயிருந்தவர் இப்போது ஓர்குருவாகியிருக்கிறார். இவர்தான் திரிச்சூரிலே சமீபத்தில் குருப்பட்டம் பெற்றுக்கொண்ட வண. யோசெவ் வடக்கன் சுவாமியார். குருமடத்துமாணவனுய் இருந்துவரும்போதே மலையாளத்தில் கம்யூனிஸ்ததடை முன்னணிஒன்றை நிர்மாணித்து நடத்த இவர் விசேஷஅனுமதி பெற்றுக்கொண்டார் இவர் சனங்களிடையே தொண்டாற்றிச் சுகாதாரவசதியுள்ள வீடுகள் அமைப்பதிலும், வைத்திய சகாயவசதிகள் செய்வதிலும், கத்தோலிக்க சமூகதர்ம தத்துவங்களை அடிப்படையாகக்கொண்டு மக்களின் வறுமையை ஒழிப்பதிலும் ஈடுபட்டுவந்தார். அநேககூட்டங்களிலும்பேசிவந்தார். ஓர்முறை இவர் பேசிக்கொண்டிருக்கையில் கூட்டத்திலிருந்தசனங்கள் அவர்மேல் கல்லெறியத்தொடங்கினர். பலமுறை கற்கள் அவரைத் தாக்கின. ஆயினும், மூர்ச்சித்து விழுகிறவரையில் பேசிக்கொண்டேயிருந்தார். இவரின் அப்போஸ்தலதொண்டிற்கு உதவியளிக்குமுகமாக இவரது குருத்துவஞாபககம்மிற்றிஒன்று திரிச்சூரில் நிறுவப்பட்டிருக்கிறது.

## விடுதலையடைந்த குருவானவர்

கம்யூனிஸ்த சீனுவிலிருந்து விடுவிக்கப்பெற்று, ஹொங்கோங் தீவையடைந்து, அங்கிருந்து நேரே றோமாபுரிசென்று பாப்பரசரின் பேட்டிபெற்றுள்ள வண. ஹறல்ட் றிக்னி சுவாமியார் தமதுவரலாற்றைப் பின்வருமாறு எடுத்துக்கூறியிருக்கிறார்: "அமெரிக்காவுக்காக நான் வேவுபார்க்கிறேனென்று சூழ்ச்சிசெய்து கற்பிதமாகச் செய்யப்பட்ட குற்றச்சாட்டின்பேரில் நான் கைதுசெய்யப்பெற்றேன். பீக்கிங் நகரிலுள்ள கத்தோலிக்க சர்வகலாசாலை அமெரிக்க உளவுபார்க்குந் தொழிலின் மத்தியதானமென்று பழிசுமத்தப்பட்டது. அதனுல், அதன் தலைவரென்றமட்டில் நான் பிரதம உளவுகாரனைப் பிரசித்தஞ் செய்யப்பட்டேன். நான்சிறைவாசஞ்செய்த நான்குவருடங்களிலும் 11அடிநீளமும், 10அடி அகலமுமுள்ள ஓர் அறையில் மற்றும ஏழுபேருடன் பங்காக வசிக்கவிடப்பட்டேன். பூசை செய்யவோ, பூசைகாணவோ, "ஒவ்வீஸ்" செபத்தைச் சொல்லவோ, சிலுவைஅடையாளம் முதலாம் வேதசம்பந்தமான வெளியடையாளங்களைக் காண்பிக்கவோ நான்ஒருபோதுமே அனுமதிக்கப்படவில்லை. செபஞ் செய்யாமல்தானும் நான் விலககப்பட்டேன். ஆனுல் எனது மவுனசெபத்தைக் காவலர்களால் கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை.'

## ஆசா. பிறெடறிக் ஓசானம்

சென்வின்சென்ற் டீ போல் சபையை அடியிட்ட ஓர்பிரான்சிய நியாயவாதியான ஆசா. பிறெடறிக் ஓசானம் அவர்களின் புனிதஉடலானது, அவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டஞ்சூட்டும் விசாரணையின் மற்றுமோர் நடவடிக்கையாகப் பரீஸ்நகர கத்தோலிக்கஸ்தாபனத்தின் நிலவறையிலுள்ள கல்லறையிலிருந்து சமீபத்தில் வெளியிலெடுத்து வைத்திய பரிசோதனை நடத்தப்படலாயிற்று. பின்னர்அது சிந்தூரமரப்பேழையொன்றில் வைத்து, லோகத்தால்செய்த சிமிழ்ஒன்றில் முத்திரையிட்டுத் திரும்பவும் அடக்கஞ்செய்யப்பட்டது. அவ்வேளைநிகழ்ந்த திருவைபவத்தின்போது, திருச்சபைஅதிகாரிகளும், சென்வின்சென்ற் டீபோல் சபையின் பிரதமதலைவரும், ஓசானம்அவர்களின் பீட்டப்பிள்ளைகளும் சமுகமாயிருந்தார்கள். அவரின்புனிதஉடல் கல்லறையிலிருந்து வெளியிலெடுத்துப் பரிசோதனைசெய்யப்பட்டமை, இது இரண்டாம் முறையாகும். அது முதன்முறையாக 1929-ம் ஆண்டு வெளியிலெடுக்கப்பட்டது. அவ்வருடத்தில்தான் அவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுவதற்கான ஆரம்பவிசாரணை நடைபெற்றது. அப்போது அவரின்புனிதஉடல் அழியாதிருக்கக் கண்டறியப்பட்டது. ஆசா. பிறெடறிக்ஓசானம் மார்சேல்ஸ்நகரிலே 1853-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 8-ந் திகதியன்று தமது 40-ம் வயதில் பரமபதமடைந்தார்.

## பிறேக்நகர் அதிமேற்றிராணியார்

இரும்புத்திரைநாடுகளில்ஒன்றாகிய செக்கோசிலவக்கியாவின் திருச்சபை மேலதிகாரியும், பிறேக்நகர் அதிமேற்றிராணியாரும், தற்போது 68 வயதுடையவருமான பீறன் ஆண்டவர் இற்றைக்கு ஐந்துவருடங்களின் முன் சிறைவைக்கப்படுமாறு கொண்டுபோகப்பெற்றார். அது முதல் அவர் எங்கேயிருக்கிறார் என்பதுபற்றி யாதொன்றுமே எவரும் கேள்விப்படவில்லை. எங்கேயோ அறியப்படாத ஓர் இடத்தில் ஓர்கைதியாய் இருக்கிறாரென்று அறிவிக்கப்படுகிறது. செக்நாட்டுக் கம்யூனிஸ்தர்களால் அவர் கைதுசெய்யப் பெற்றபோது சிறைச்சாலை அனுபவமற்றவராக அவர் இருக்கவில்லை. ஏனெனில், 2-வது உலகயுத்தத்திலே நாஸிகள் இவரைக்கைதுசெய்து டாச்சோவிலுள்ள பேர்கேட்ட சிறைமுகாமில்அடைத்துவிட்டார்கள். பீறன் அதிமேற்றிராணியார் வேதத்துக்காக வாதைவேதனைப்பட அப்போதே தம்மைத் தயாராக்கிக் கொண்டார். "அடுத்தமின்ட்சென்றி" தாமாயிருக்கலாமென்றும் 1949-ம் ஆண்டு கூறியிருந்தார். "கம்யூனிஸ்த அரசாங்கத்துடன் நாம் ஏதோ ஓர்வகை உடன்படிக்கை செய்துமுடித்திருக்கிறோமென்று சிலவேளை விரைவிலே சொல்லப்படக் கேட்பீர்கள்; என்னதான் நேர்ந்தபோதிலும் தேவகட்டளைகளை மீறுகின்ற எந்தஒரு உடன்படிக்கைக்கும் நாம் ஒருபோதுமே கைச்சாத்திடமாட்டோம்" எனக் கூறித் தமதுகுருபார்சங்கத்தை அவர்எச்சரித்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சித்திரை மாதம்

மிஷன் கருத்து: கோறியகாட்டிலே வேதபோதகர்களின் தொகை அதிகரிக்கும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்

1956-ம் ஆண்டு
சித்திரைமாதம் 19-ந் திகதி

## புதிய அரசாங்கம்

"பழையனகழிதலும் புதியனபுகுதலும்" என்றமரபிற்கிணங்கச் சென்றபொதுத்தேர்தலின் விளைவாய்ச் சேர் ஜோண் கொத்தலாவல அவர்களைப் பிரதமராகக்கொண்டிருந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் வீழ்ச்சியடைந்தது. அதனிடமாக இன்று பிரதமராகவந்திருக்கும் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா அவர்களைத் தலைவராகக்கொண்டுள்ள மக்கள் ஐக்கியமுன்னணிக்கட்சி வெற்றியீட்டி அரசாங்கத்தைப் பொறுப்பேற்றுநடத்த முன்வந்துள்ளது. "வெற்றியும்தோல்வியும் ஒருவன்பங்கன்று." அவைகள் மாறிமாறிவந்துகொண்டேயிருக்கும். ஐக்கியஅமெரிக்க தேசத்தில் நெடுநாள் ஆட்சிசெய்துவந்த ஜனநாயககட்சி சென்ற பொதுத்தேர்தலில் தோல்வியுற்றது. குடியரசுக்கட்சி வெற்றியீட்டியது. இதன் விளைவாக ஜெனறல் ஐஸன்ஹாவர் ஜனாதிபதியானார். பிரித்தானியிலே நெடுங்காலம் ஆட்சி நடத்திவந்த பரம்பரைக்கட்சி சென்றயுத்தமுடிவில் தோல்வியுற்றது. தொழிற்கட்சி வெற்றியீட்டியது. இதன் விளைவாகப் பிரதமர் சேர் வின்ஸ்றன் சேர்ச்சில் பதவியிழந்தார். தொழிற்கட்சித்தலைவர் திரு. அட்லி பிரதமராயினார். பின்னர் நடைபெற்ற பொதுத்தேர்தலிலே தொழிற்கட்சி வீழ்ந்தது. பரம்பரைக்கட்சி வெற்றியீட்டியது. இதன்விளைவாகச் சேர் வின்ஸ்றன் சேர்ச்சில்அவர்கள் திரும்பவும் பிரதமராயினார். பிரதமர்கள் மாறிமாறிவந்துகொண்டிருப்பார்கள். அரசியற்கட்சிகளும் மாறிமாறி அதிகாரத்துக்கு வந்துகொண்டிருக்கும். ஆனால், அவரவர் ஆட்சிகாலத்தில் நிகழ்ந்தசம்பவங்கள் சரித்திரத்தில் நிரந்தரமாக இடம் பெற்றிருக்கும்.

இலங்கைப் புதியபிரதமராக வந்திருக்கும் திரு. பண்டாரநாயகா அவர்கள் இப்பதவியை நெடுநாள் ஆசித்திருந்தாரென்றும், அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தாரென்றும் சொல்வாருமுண்டு. ஆனால், பிரதமர்பதவியென்பது ஓர்பஞ்சணைமெத்தையன்று. அல்லும் பகலும் தலையுடைத்துக்கொண்டிருக்கவேண்டிய ஓர்அதிகாரபதவி இதுவாகும். பிரதமர்பதவி வகித்து அரசாங்கபொறுப்பைக் கையேற்றிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே அவரை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் பலவாகும். அவர் அரிசிவிலையைப் படிஒன்று 50 சதத்திலிருந்து 35 சதமாக, அன்றேல் டக்றர் என்.எம். பெறேரா கேட்டிருப்பதுபோன்று படிஒன்று 25 சதமாக விற்கச்செய்யலாம். சீனியின் விலையையும் அவர் குறைக்கலாம். டக்றர் என். எம். பெறேரா கேட்டுள்ளபடி, ரூத்தல் ஒன்றுக்குப் 15 சதந்தானும் குறைத்துவிடலாம். முத்திரைவிலையையும் இறக்கிவிடலாம். இவைகளெல்லாம் இலங்கையர்களென்ற மட்டிலே இந்நாட்டில்வதியும் சகல சாகியத்தினருக்கும் மகிழ்ச்சிதரக்கூடியனவே. ஆனால், இன்றைய பெரும்பிரச்சினையாகிய மொழிப்பிரச்சினையிலும் தலையிட்டுச் சிங்களப்பாஷையையே அரசாங்கபாஷை யாக்கிவிடலாம். ஆயின் இதுசெயல் இலங்கையர்களென்றமட்டிலே தமிழ்ப்பேசும் சாகியத்தினரான பலலட்சக்கணக்கானோரின் மனதைப் புண்படுத்தும் செயலாகுமென்பதையும், இலங்கையிலேதமிழ்ப்பேசும்மக்கள் உள்ளவரை இது செயல் எப்போதுமே துவேஷிக்கப்பட்டுவருமென்பதையும் எவருமே ஒப்புக்கொள்வர்எனலாம்.

புதியஅரசாங்கம் எடுத்துக்கொள்ளும் நடபடிகளிலிருந்து அடுத்த சிலவாரங்களில் தமிழ்மக்களின்நிலைமை தெளிவாகிவிடுமென நம்பப்படுகிறது. ஆனால், அன்று ஓர்பெரியார் கூறியுள்ளபடி, "ஒரு அரசாங்கம் தனது அலுவல்களை நடத்துவதில் சிறுபான்மை வகுப்பினரின் நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் பெறாவிட்டால் அத்தகைய அரசாங்கத்தை உண்மையான ஜனநாயக அரசாங்கமென்று சொல்லமுடியாது." இன்று தமிழ்மக்களுக்கு ஓர்கஷ்டகாலமென்றும், கடுஞ்சோதனைகாலமென்றும் சொல்லப்படுகிறது. பொதுத்தேர்தல் முடிவடைந்தகாலமுதல் அவர்கள்மீது கவலை—அச்சம்—சந்தேகமென்னும் கார்மேகம்கவிந்துகொண்டிருப்பதாய்க் காணப்படுகிறது. என்றாலும், கடவுள் நம்பிக்கையும், தன்கையே தனக்குதவியென்ற திடமான சுயநம்பிக்கையும், "ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு" என்ற ஐக்கியநம்பிக்கையும் அவர்களிடம் நிலைபெறுமாயின் எல்லாம் காற்றாய்ப் பறந்துவிடுமென நம்பியிருக்கலாம்.

# திருப்பாடுகளின் புனிதநாடு

—: By Rev. Fr. J. Britto, T. O. C. D. :—

(தமிழாக்கம்: ஆசிரியர் எல். பாக்கியநாதர்)

நமதுவாழ்க்கையில் நெடுநாள் வெகுஆவலாய்க் காத்திருந்த ஒன்றைக் கண்டடையப்போகிறோம் என்று எண்ணுவதே ஓர் இன்பம். கண்டடைதலோ ஈடுசொல்லமுடியாத ஓர்அநுபவம். இதனாலேயே நாம் அனைவரும் பொழுதுபுலருமுன்னரே எழுந்துவிட்டோம். எழுந்து பரிசுத்த நாட்டின் தோற்றத்தைக் காணும்பொருட்டுப் பெரிதும்ஆவலுடன் காத்திருந்தோம்.

பலஸ்தீன்நாட்டிற்கு எம்மைப் பந்தோபஸ்துடன் கொண்டு சென்றகப்பல் ஓர் இத்தாலிய கப்பல். இதிலே பிரயாணிகள் சேமமாகவும், சந்துஷ்டியாகவும் பிரயாணஞ்செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் தாராளமாகச் செய்யப்பட்டிருந்தன. ஐம்பது குருமாரைக்கொண்ட எமதுகோஷ்டியில் இருபத்தைந்துபேர் ஜேர்மனியைச்சேர்ந்த றெஜெம்பேர்க் மேற்றிராசன குருமாராவர். எல்லோரும் பல்வேறுகல்லூரிகளில் சமயபாடங் கற்பிக்கும் ஆசிரியத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள். பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்தவர்கள் பதினெண்மர். வெவ்வேறு தேசத்தவர்களாயினும் எல்லோரும் ஏகநோக்கத்துடனேயே இத்திருயாத்திரையைத் தொடக்கினோம்.

காலையில்எழுந்து காத்திருந்தபடியே பரிசுத்தநாட்டின் நீலமலைத்தொடர்கள் எமதுகண்களுக்குப் புலப்பட்டன. வடக்கே லெபனன்மலையிலிருந்து தெற்கே கேர்மன் மலைவரை தொடர்ந்திருந்த மலைகளைக்கடந்து பரிசுத்தநாட்டின் எல்லைக்குள்ளே பிரவேசித்தோம். எமது பிரயாணத்தின்போது எம்முடன்கூடவந்த இன்னுமொரு கோஷ்டியைச்சேர்ந்த குருமாருக்குத் தலைமைவகித்தார் சாமிநாதர்சபைச் சுவாமியார்ஒருவர். இவர் சமயகல்வியில் நிபுணர். வேதாகம வியாக்கியானம்பண்ணும் வித்தகர். இவர் பிரயாணத்தின் ஆரம்பத்திலிருந்தே எமக்கு விரிவுரைகள் நடத்தத் தொடங்கினர். பரிசுத்த நாட்டுத் திருயாத்திரைக்கு எம்மைப் படிப்படியாகப் பக்குவசாலிகளாக்கிவிட்டார்.

ஜெருசலேம்பட்டணத்திற்குச் செல்லும் வீதியில் வந்துவிட்டோம். நாம்நிற்கும் இடத்தைப் போல் வேறோரிடத்தை நாம் இதுவரை கண்டதில்லை. சீரியாவிலுள்ள தமஸ்குஸ்நகரிலிருந்து யோர்தானின் தலைப்பட்டணமாகிய அம்மன்வரையுள்ள 180 மைல்தூரப்பிரயாணம் எப்போதாவது எம்மனத்தைவிட்டு அகன்றுவிடப்போவதில்லை. வனாந்தரத்திலிருந்து குறுக்கே தெற்குநோக்கி வீதிசென்றது. நூலடித்ததுபோல் நேராக இவ்வீதி கிட்டத்தட்டஎட்டுமைல் தூரஞ்சென்றது. இங்கிருந்து மேற்குநோக்கி 40 மைல்வரை அம்மனுக்கும், ஜெருசலேமுக்குமிடையே வீதிசென்றது. கடல் மட்டத்திலிருந்து 2,300 அடிஉயரத்திலிருந்து கடல்மட்டத்திலிருந்து 1,500 அடிதாழ்ந்த யோர்தான்நதிப் பள்ளத்தாக்கிற்கும், பின்னர் 2,428 அடி உயரமான மேட்டுநிலத்திற்குமாக நமது மோட்டார்ரதம் இறங்கி ஏறிச் சென்றது. இப்பிரயாணத்தில் நான்குமணித்தியாலங்களுக்குக் குறையாதநேரத்தைச் செலவிட்டோம்.

நாம் சென்றபாதையின் வலதுபக்கமாகப் பெத்தானியும், பெத்பேச்சும் குறுக்கிட்டன. ஜெருசலேமிலே எமது திவ்விய இரட்சகர்தங்கியகாலத்தில் அவரை உபசரித்துச்சங்கித்து, அதனால்கீர்த்தியையும், ஆசீர்வாதத்தையும் ஈட்டிக்கொண்ட பெத்தானி ஓர்சிறியகிராமம். கல்லறையினின்று எடுக்கப்பட்டு, மரணநித்திரையினின்று எழுப்பப்பட்ட லாசர்வசித்த இடத்தை இப்போது சிற்றாலயம்ஒன்று சிறப்பிக்கின்றது. இவ்விடத்தை நாம்அடைந்தபோது திவ்வியஇரட்சகர் லாசறுவை உயிர்ப்பித்துத் தமதுதெய்வீகத்தைநிரூபித்தசெயலும், மரியாள், மார்த்தாள்மட்டில் காட்டிய நேசமும் நமது விசுவாசத்தை மீட்டும் மீட்டும் பலப்படுத்தின. பெத்பேச் ஓர்சிறிய தங்குமிடம். பெத்தானியிலிருந்து ஒலிவமலைக்குச்செல்லும் ஏற்றப்பாதையில் உள்ளது. இவ்விடம் இப்போது பிரான்சீஸ்கன் சபைச் சந்நியாசிகளின் ஆச்சிரமமாகவும், ஆலயமாகவும் காட்சி அளிக்கின்றது. நமது இரட்சகர் ஜெருசலேமுக்குப் போவதற்கு இம்மலைமீது செல்லும் பாதையையே உபயோகித்திருக்கவேண்டும்.

கிறீஸ்துநாதரின் திருப்பாடுகளுக்கு என்றும்அழியாதஞாபகசின்னமாக விளங்குவது ஒலிவேத்துமலையாகும். இம்மலையின் உச்சிமீதிருந்து ஜெருசலேமின்காட்சிகளை இலகுவாகக் கண்டுகளிக்கலாம். கிறீஸ்துநாதர் ஒருபாறையின்மீது இருப்பதையும், ஜெருசலேம்நகரைப் பார்த்து அவர் பரிதாபப்படுவதையும் இதேஉச்சிமீது இருப்பவர் ரூபிகரித்துக்கொள்ளத் தவறமாட்டார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சமாதான போக்கு

உலகில்சமாதானத்தை நிரந்தரமாக நிறுவும்பொருட்டு ஐக்கியநாடுகளின் ஸ்தாபனம் உதயமாயிற்று. ஆனல், வல்லரசுகளின் போட்டிகாரணமாக உலகின் பலபகுதிகளிலும் சமாதானத்துக்கு ஆபத்துஏற்பட்டவண்ணமிருக்கிறது. ருஷியாவின் கம்யூனிஸ்த ஆதிக்கவெறியும், மேற்குவல்லரசுகளின் கூட்டுஇராணுவ ஒப்பந்தமுஸ்திப்பும் உலகில் சமாதானத்தைச் சீர்குலைத்துவருகின்றன. கோறியயுத்தமும், இந்தோசீனயுத்தமும், வல்லரசுகளது போட்டியின்பயனக ஏற்பட்டவையாகும். இந்தயுத்தங்களில் பல்லாயிரக்கணக்கானமக்கள் மடிந்தனர். வல்லரசுகளது போட்டியின் பயனுக இன்றுகோறியா, இந்தோசீன, ஜேர்மனிஆகிய நாடுகள்ஒவ்வொன்றும் இருகூறுகளாகத் துண்டாடப்பட்டுக் கிடக்கின்றன. வல்லரசுகளினது போட்டியின்விளைவாக இப்பொழுது மத்திய கிழக்கு மண்டலத்திலும் அமைதி சீர்குலைந்துள்ளது. அங்கு எகிப்துக்கும், இஸ்றவேலுக்குமிடையேயுண்டான தகராறு இப்போது போராகமாறியுள்ளது. எகிப்திலும், இஸ்றவேலிலும் பெரும்போருக்கான ஆயத்தங்களும், முஸ்திப்புகளும் நடைபெற்றுவருகின்றன.

* * *

இவ்விரு நாடுகளுக்குமிடையே பெரும்போர்ஒன்று ஆரம்பமானல் வல்லரசுகளின் போட்டிகாரணமாக அப்போர் உலகயுத்தமாக மாறவும்கூடும். அப்பகுதியின் சமாதானத்துக்குத் தாங்கள் பொறுப்புள்ளவர்களென்று கூறும் மேற்குவல்லரசுகளான அமெரிக்கா, பிரித்தானி, பிரான்ஸ்மூன்றும் கூட்டுஇராணுவ ஒப்பந்தங்கள்மூலமும், ஆயுதப் பயமுறுத்தல் மூலமும் மத்தியகிழக்கு மண்டலத்திலே சமாதானத்தை நிறுவமுடியுமென்று கனவு காண்கின்றன. அமெரிக்கா மத்திய தரைக்கடலுக்கு யுத்தக்கப்பல்களை அனுப்பியுள்ளது. இவ்வாரத்திலே பாக்டாட்ஒப்பந்தநாடுகளின் மகாநாடு கூடுகின்றது. இவ்விதசந்தர்ப்பத்திலே மத்தியகிழக்கில் சமாதானத்தை நிலைநாட்ட உடனடியாகநடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியபொறுப்பு ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் கடமையாகும். இப்பொழுது அந்தஸ்தாபனத்தின் பொதுக்காரியதரிசி எகிப்து—இஸ்றவேல்நாடுகளுக்கு விஜயம் செய்து அங்குசமாதானத்தை நிலைநாட்ட முயற்சித்துவருகிறார். அவரதுமுயற்சி வெற்றியுற்று மத்தியகிழக்கு மண்டலத்தில் அமைதிநிலவவேண்டுமென்றே உலகம்ஆசிக்கின்றது.

* * *

இப்பொழுது ஸ்பானியதேச வெளிநாட்டுமந்திரி அமெரிக்காவுக்கு விஜயஞ்செய்துள்ளார். இவ்விஜயத்தின் பயனுக அமெரிக்கவரசு மத்தியதரைக் கடலையடுத்த நாடுகளின் கூட்டுஇராணுவப் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்த முயற்சிப்பதாகத் செய்தி வெளிவந்துள்ளது. ஆசியாவில் சீற்றே ஒப்பந்தமும், மத்தியகிழக்குப் பிரதேசத்தில் பாக்டாட் ஒப்பந்தமும் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதையடுத்து இப்பொழுது மத்தியதரைக்கடற்பகுதிக்கு ஓர்ஒப்பந்தமேற்படுத்த மேற்குவல்லரசுகள் முன்வருவது உசிதமாகமாட்டாது. இவ்வித கூட்டுஇராணுவபாதுகாப்பு ஒப்பந்தங்கள் உலகில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்குப்பதிலாகச் சச்சரவுகளையே உண்டுபண்ணுமென்ற உண்மையை மேற்குவல்லரசுகள் இன்னும் உணர்ந்துகொள்ளாதிருப்பது துரதிர்ஷ்டமேயாகும்.

* * *

அல்ஜீரியாமீது பிரான்ஸ் யுத்தம் தொடுத்திருக்கிறது. அல்ஜீரியமக்கள் சுதந்திரப்போர் நடத்திவருகிறார்கள். அவர்களைஒடுக்கவே பிரான்ஸ் அல்ஜீரியாமீது யுத்தம் தொடங்கியிருக்கிறது. ஏற்கனவே அல்ஜீரியாவில் மக்களின் சுதந்திரப்போரை முறியடிக்க இரண்டு லட்சம் பிராஞ்சிய வீரர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். மேலும் ஒருலட்சம் பிராஞ்சிய வீரர்களை அல்ஜீரியாவுக்கு அனுப்பிவைக்கப் பிரான்சிய மந்திரிசபைதீர்மானித்திருக்கிறது. ஆயினும் மக்களின் சுதந்திரதாகத்தை எவ்வித ஆயுத பலத்தைக்கொண்டும் அடக்கமுடியாதென்பதைப் பிரான்ஸ் இன்னும் உணராதிருப்பது ஓர்விந்தையே. ஆகவே, அல்ஜீரியப் பிரச்சினையில் ஐக்கியநாடுகளின்ஸ்தாபனம் உடனடியாகக் கவனஞ்செலுத்தி அதைத் தீர்க்க முயற்சிக்கவேண்டியது மிக அவசியமாகும். ஆசியாவிலே பிரான்சின் ஏகாதிபத்தியம் நின்றுவிட்டது. இப்பொழுது வடஆபிரிக்காவில் நடக்கும் போராட்டம் இந்த ஏகாதிபத்தியத்தையும் குழிதோண்டிப் புதைத்துவிடும் போலிருக்கிறது.

* * *

நிற்க, வல்லரசுகளின் கெடுபிடியுத்தமும், அதன்விளைவாக அதிகரித்து வரும் ஆயுதப்பெருக்கமும் இன்றைய உலகின் நிரந்தர சமாதானத்துக்குப் பேராபத்தாக இருக்கின்றன. கெடுபிடியுத்தம் ஆரம்பமானபின் கடந்த எட்டுவருடகாலத்திலும் வல்லரசுகளின்கோஷ்டிகள் தங்கள்ஆயுதங்களைப் பெருக்கிக்கொண்டே வந்திருக்கின்றன. இப்போட்டியில் ஈடுபட்டுள்ள வல்லரசுகளான அமெரிக்காவும், ருஷியாவும் நடத்திவரும் கெடுபிடியுத்தம் உலக மகாயுத்தமாக மாறி உலகையே அழித்துவிடக்கூடுமென்று உலகமக்கள் அச்சத்திலும், பீதியிலும் ஆழ்ந்திருக்கிறார்கள். அமெரிக்கா உலகெங்கணும் விமானப்படைத் தளங்களையும் கடற்படைத்தளங்களையும் நிறுவியுள்ளது. ருஷியா அணுக்குண்டு உற்பத்தியில் முனைந்துள்ளது. இவ்விரு வல்லரசுகளும் போட்டியிட்டுக் கொண்டு அணுக்குண்டுப் பரீட்சைகள் நடத்திவருகின்றன. அமெரிக்காவிடம் முப்பத்தைந்துலட்சம் போர்வீரர்களும், ருஷியாவிடம் நாற்பத்தைந்து லட்சம் போர்வீரர்களும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. 1955-ம்ஆண்டு ஜெனிவாவில்நடைபெற்ற மகாநாட்டின் பின்தான் ருஷியா ஆறுலட்சம் போர்வீரர்களைக் குறைத்துக்கொண்டது. அமெரிக்கா கோறியாவிலும், மற்றுமிடங்களிலும் நிறுத்தியிருந்த தனது போர்வீரர்களைத் தருவித்துக் கொண்டது. அமெரிக்க — ருஷிய ஆயுதப்போட்டியால் தங்களுக்கு ஆபத்து நேரிடுமென்பதை உணர்ந்த பிரித்தானியும், பிரான்சும்சேர்ந்து இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உலகஆயுதப் பரிகாரணத் திட்டமொன்றை வகுத்துள்ளன. இத்திட்டப்பிரகாரம் படிப்படியாக ஆயுதங்களைக் குறைப்பதற்கான வழிகள் வகுக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவும், ருஷியாவும் இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள முன்வருவது ஆயுதப்பெருக்கத்தால் ஏற்படும் அபாயத்தைத் தவிர்த்து, உலகசமாதானத்துக்கு வழிதேட உறுதுணையாயிருக்கும்.

# மாஜி பிரதமரின் அறிக்கை

முன்னைநாள் பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் தமது பிரதமர் பதவியை இராசிநாமாச் செய்தபின் வெளியிட்டுள்ள அறிக்கையிலே பின்வருமாறு தெரிவிக்கின்றார்:

ஐக்கியதேசியக்கட்சி ஆட்சிப்பதவியை ஒப்படைத்துவிட்டது. இனிமேல் எனது கட்சியினரும், நானும் சனப்பிரதிநிதிகள் சபையின் எதிர்க்கட்சியிலிருந்து நாட்டின் நலனுக்காக—நமது கட்சியின் கொள்கைகள், இலட்சியங்களுக்கேற்ப வேலைசெய்வோம்.

நான் இரண்டரை வருடகாலம் பிரதமாய் இருந்துள்ளேன். இந்த இரண்டரைவருட காலத்திலும்—எனது கட்சிக்குத் தலைமைவகித்த காலம் முழுவதிலும் நாட்டில்அமைதியும், முன்னேற்றமும் நிலவின. சட்டத்தையும், ஒழுங்கையும் நாம் நிலைநாட்டினேம். பொது சனங்களிடமிருந்தும், அரசாங்க சேவையிலுள்ளவர்களிடமிருந்தும், பத்திரிகைகளிடமிருந்தும் எனக்குக் கிடைத்த ஆதரவுக்கு எனது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நான் பதவியேற்றபோது இருந்த ரொக்கப்பணம் 3 கோடியே 60 லட்சம் ரூபா. எனினும், இப்போது புதிய அரசாங்கத்திற்கு நாம் 19 கோடியே 70 லட்சம்ரூபா ரொக்கப்பணமாக விட்டுச் செல்லுகிறோம். சீனவுக்கும், பர்மாவுக்கும் முற்பணமாகஅளித்த மொத்தம் 6 கோடியே 50 லட்சம்ரூபா போன்ற மூலதனங்கள் இதில் கணக்கிடப்படவில்லை. அன்றியும், நமது குறைந்தகாலக்கடன்நிதிகளைப் 18 கோடியே 40லட்சம் ரூபாவிலிருந்து 6கோடிரூபாவாகக் குறைத்துள்ளோம். மத்தியவங்கியிடம் இருந்து பெற்றமூற்பணம் 7 கோடிரூபாவையும், தலதாபனபகுதிகளிடமிருந்து பெற்றகடன்கள் 5 கோடியே 90 லட்சம்ரூபாவையும் திருப்பிக்கொடுத்துள்ளோம். கடந்த இரண்டரைவருடகாலத்தில் இவ்வளவுபெருந்தொகையை நமது ஆறுவருட அபிவிருத்தித் திட்டத்திற்காகப் பாதுகாக்கக் கூடியதாயிருந்ததுபற்றி நாங்கள் மகிழ்ச்சியுறுகின்றோம். புதியஅரசாங்கம் இப்பணத்தை நாட்டின்சிறந்த நலனுக்குப் பயன்படுத்தக் கூடியதாயிருக்கவேண்டும்.

அரிசிவிலையைக் குறைக்கக் கூடிய சாத்தியம்பற்றி ஆராய எமதுஅரசாங்கமும் தவறியதில்லை. பர்மாவிடமிருந்தும், சீனவிடமிருந்தும் அரிசி வாங்குவதிலே அண்மையில் நாம் வெற்றிகண்ட குறைந்தவிலைகள் பாவிப்பாளருக்கு மிகத்திருப்தியான அளவுக்கு விலையைக்குறைக்கப் போதுமானவையென்று கண்டோம். ஆயினும்நாங்கள் அவ்விதம் அரிசிவிலையைக் குறைப்பதை உடனடியாக வெளியிடாமலிருந்தகாரணம், இது "ஒருதேர்தல் தந்திர"மாகக் கருதப்பட்டு விடுமென்பதினாலேயாம். பொதுத்தேர்தலின்பின் இதனை வெளியிடவேண்டுமென்பது கருத்தாயிருந்தது.

ஐக்கியதேசியக்கட்சிக்கும், அக்கட்சி அங்கத்தவர்களுக்கும் தமதுவாக்குகளை அளித்த பெருந்தொகையான வாக்காளர்களுக்கு எனதுமனப்பூர்வமானநன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேதருணத்தில் அவர்களையும், மற்றும்பிரசைகள் அனைவரையும் ஜனநாயகத்திலே தமதுநலன்கள் குறையாமலிருக்கவும், தமதுஉரிமைகளையும், பெருமைகளையும் பாதுகாப்பதிலும் விழிப்பாயிருந்து கவனித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். அவசியமேற்பட்டால் எனது கட்சியும், நானும்நாட்டின் அழைப்பை ஏற்கத்தயாராயிருப்போம்.

---

## நாநா சங்கதிகள்

● கோடைகால மாதங்களிலே வர்த்தகஆகாயவிமானங்கள் ஐக்கிய அமெரிக்க தேசத்துக்கும், ஐரோப்பாவுக்குமிடையே சராசரியாக ஒவ்வோர் பதினேழுநிமிஷத்துக்கும்ஒவ்வொன்று வீதம் புறப்பட்டு அத்திலாந்திக் சமுத்திரத்தினூடாகப்பறந்துசெல்லுகின்றன.

● தற்போது பரிசுத்தஸ்தானத்தினிடமாக 42நாடுகள் இராசியதூதுவர்களையும், ஸ்தானிகர்களையும் கொண்டிருக்கின்றன. இத்தொகை 1939-ம் ஆண்டிலும் ஐந்துகூடியதாகும். அப்போது அநேகஇரும்புத்திரை நாடுகள் வத்திக்கானுடன் தங்கள்இராசியஉறவுகளை நிறுத்திக்கொண்டன. 42நாடுகளிலும் இராசியதூதுவர்களைக் கொண்டுள்ளவை 16. ஸ்தானிகர்களைக் கொண்டுள்ளவை 26.

● சுதந்திர மேற்குஜேர்மனியிலே புறெட்டஸ்தாந்தர்களைப்போன்று கத்தோலிக்கரும் தொகையளவில் ஏறக்குறையச் சமமாயிருக்கின்றார்கள். அங்குள்ள கத்தோலிக்கரின் தொகை 2,15,76,00பேர். புறெட்டஸ்தாந்தரின்தொகை 2,38,78,000 பேர். அதன் சமஷ்டிநாடுகள் ஒன்பதிலும் நான்கிலே கத்தோலிக்கர் பெரும்பான்மையினராய் இருக்கின்றார்கள்.

● பாப்பரசரின் 80-வதுபிறந்த பெருநாளைமுன்னிட்டு உலகம்முழுவதிலுமுள்ள அரசியற் தலைவர்களிடமிருந்தும், ஏனையோரிடமிருந்தும் சென்றபங்குனிமாதத்தின் முதற்பத்து நாட்களிலும் குறைந்தபட்சம் 25,000 சோபனவாழ்த்துத்தந்திகள் அவருக்கு அனுப்பிவைக்கப்படலாயின.

● மேற்குஜேர்மனி சிலகாலத்தின் முன் "மக்கள்கார்" என ஓர் நவீன காரைக்கட்டி வெற்றிகண்டதன்விளைவாக இப்போது "மக்கள்விமானம்" என்று ஓர்நவீனவிமானத்தைக் கட்டமுன்வந்திருக்கிறது. இருஆசனங்களைக் கொண்ட இந்தவிமானம் 14,000மாக் பெறுமதியுடையதாகும். "மொறு 28" என அறியப்படவிருக்கின்ற இந்தக் காரைப்பொன்நகரிலுள்ள அல்பொன்ஸ் புவெற்ஸர்என்றகம்பெனியே கட்டவிருக்கிறது. 28அடிநீளமான சிறகுகளைக்கொண்ட இந்தவிமானம் 24 அடிநீளமுடையதாயிருக்கும்.

● ஆஸ்திரேலியாவிலும் கார்கள் செய்யும் கைத்தொழில் தீவிரவிருத்தியடைந்துவருகிறது. அங்கு தற்போது கார்செய்யும் கைத்தொழிலை விருத்தி செய்வதற்காக நடைபெற்றுவரும் முயற்சியின்பயனுக வாரந்தோறும் ஆயிரம்கார்கள் செய்யப்படவிருக்கின்றன. அதனல் ஆஸ்திரேலியாவிலே பிரித்தானியகார்வியாபாரத்துக்குப் பெரும்விழுகை ஏற்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்தெழுதலின் நாள்

—: தே. ந. ச. ம. :—

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஈஸ்றர்தினமன்று மாலை. விளக்குகள் பொருத்தப்பட்டு, அவற்றைச் சுற்றிலும் யேசுவின்சீடர்கள் குழுமிப் பகலில்நடந்த விஷயத்தைப் பற்றிக் கதைகதையாய்ப் பேசிக்கொண்டிருந்தனர். அச்சமயம் அமைதியாகத் திடீரென்று எவராலும்கவனிக்கப்படாமல், நிழல் நிலத்தில்விழாமல், சிறிதேனும் சப்தமில்லாமல், எந்தக்கதவையும்திறக்காமல், காலடிச்சப்தம்கூடக் கேட்காமல் அவர்கள்முன் அவர் தோன்றி, "எதனால் நீங்கள் இம்மாதிரிக் கலவரப்படுகிறீர்கள் ?" எனக்கேட்டார்.

மேலும், ஆண்டவர் அவர்களைநோக்கி: "இப்படிப்பட்ட எண்ணங்கள் உங்கள் இருதயத்தில் எங்கிருந்து வந்தன ? என் கைகளையும், கால்களையும் பார்த்து நான்தான்என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். என்னைத் தொட்டுப்பாருங்கள். ஒருஅரூபிக்குச் சதையும், எலும்பும்கிடையா. இவையெல்லாம் எனக்கு இருக்கின்றன" எனக்கூறினார்.

இவ்வாறு பேசிக்கொண்டே அவர் அவர்களுக்குத் தம்முடைய கரங்களையும், கால்களையும், தமது விலாவின் ஒருபக்கத்தையும் காண்பித்தார். சந்தேகிக்கும் தோமையார் தம்முடைய விரல்களைக் காயங்களில்விட்டுப் பார்ப்பதற்குக் கைகள், காலையில்மதலேனாள் முழந்தாளிட்டுக்குனிந்துபார்த்த ஆணிகளால் துளைக்கப்பட்ட பாதங்களிலுள்ள சிவந்தகாயங்களின் அடையாளங்கள், யேசுவின் திருஇருதயத்தின் இரகசியங்களைஅறிய அர்ச். அருளப்பர் சாய்ந்துகொண்டிருந்த அவருடைய விலாப்பக்கம்... அழிக்கப்பட்ட ஆலயம் மூன்றுநாட்களில் கட்டிமுடிக்கப்பட்டது.

அவருடையஆலயம் எழுப்பப்பட்டு, அவருடைய திருச்சரீரம் மகிமைப்படுத்தப்பட்டபோது, அவர் ஏன் இந்த அடையாளங்களையும், தழும்புகளையும் மறையும்படி செய்யவில்லை ?

"கன்னிமரியாயிடத்தில் பிறந்து, போஞ்சியுபிலாத்துவின் அதிகாரத்தின் கீழ் பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு மரித்த" அதே யேசுக்கிறீஸ்துநாதர்தான் இவரென்று நாம் நம்புவதற்காகவே. இதுவே முதற்காரணம்.

இரண்டாவதாக, அவர் அவற்றை அன்பின் அடையாளங்களாகத் தரித்துக்கொண்டார். போர்வீரன்ஒருவன் தான்போர்முனையில் அடைந்தகாயங்களுக்காகப் பெருமைப்படுகிறான் அல்லவா ? அக்காயங்கள் அவனது அழகைக் குலைப்பதில்லை. ஆனால், அவைகள் அவனுடையபெருமையின் சின்னங்களாயிருக்கின்றன. இதுபோன்றே நமதுஆண்டவரும் இக்காயங்களுடனேயே பரமபிதாவாகிய சர்வேசுரனுடைய வலதுபாரிசத்தில் மகிமையுடன் வீற்றிருக்க விரும்புகிறார்.

மூன்றாவதான முக்கிய காரணமென்னவெனில், அவர் கலாபனையினின்றும் தப்பாதிருந்தால் நாமும் தப்பமுடியாதென்பதை நமக்கு நினைவுறுத்தவே அவ்வடையாளங்களை அவர் தரித்திருந்தார். அவரே திருச்சபையின் மூலைக்கல்லாயிருக்கிறார். கற்களாகியநாமோ இஸ்பிரீத்துசாந்துவென்னும் சுண்ணச்சாந்தினால் ஆண்டவராகிய மூலைக்கல்லுடன் இணைக்கப்பட்டிருக்கிறோம்.

பாடுகள் தவிர்க்கப்படவேண்டுமென அவர் நினைத்திருந்தால், அவைகளை அவர் தவிர்த்திருக்கலாம். எம்மாவூஸ் பட்டணத்திற்குப்போகும் பிரயாணிகளிடம அவர் இயம்பியதைக் கேளுங்கள் : "இம்மாதிரியான பாடுகள்பட்டு, தமது மகிமையில் மனுஷகுமாரனானவர் நுழைவது எதிர்பார்க்கப்படவில்லையா ?"

அவருடைய திருக்காயங்கள் நமக்குத் தேவப்பிரமாணங்களை நினைவுறுத்துகின்றன. சிலுவையில்லாதிருந்தால் காலியான கல்லறையொன்று இருந்திருக்கவேமுடியாது. முள்முடி இல்லாதிருந்தால், மகிமைப் படுத்தப்பட்ட திருச்சரீரம் இருந்திருக்க இயலாது. தின்மைக்கு எதிராக நடந்தபோராட்டத்தில் மோட்சம் வெற்றியின்பரிசாக மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இந்தப்போராட்டத்தில் கலந்து கொள்பவர்களிடையே போலியான சமாதானத்தைச் சர்வேசுரன் முற்றிலும் வெறுக்கிறார்.

எதையெடுத்தாலும் பெரும்போராட்டங்கள் தற்பொழுது நடைபெறுகின்றன. உலகவரலாற்றிலேயே முதன்முதலாக எல்லாக் கலாசாரங்களும், சமூகங்களும், சந்ததிகளும் பாதாளப் பாதையைநோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன.

மற்றச்சமயங்களிலெல்லாம் உலகின் ஒருபாகம் வீழ்ந்தபோது, மற்றது பலமுடையதாய் இருந்ததென வரலாற்றின்வாயிலாக நாம் அறிந்திருக்கின்றோம். ஜெருசலேம் வீழ்ந்தபோது சால்தியர்களின்பாபிலோன் பலமடைந்தது. பாபிலோன்படுத்ததும் பார்ஸியர்கள் பெருமை பெற்றார்கள். அலெக்சாந்தருக்குமுன்பாகத் தாரியுஸ் பணிந்தபடியால் கிரேக்கர்கள் பலமடைந்தனர். இம்மாதிரியாக ஒருவர் தாழ்ந்தால் மற்றவர் உயர்ந்துவந்தனர். ஆனால், தற்சமயத்திலோ எல்லாநாடுகளும் ஆட்டம்கண்டுவிட்டன.

பழமையில் ஊறிப்போன இந்தியா, சீனாமுதலியநாடுகள்கூடக் கடந்த 2,000 ஆண்டுகளிலும் இருந்ததைவிட மிகவும்மனோவேகமாக மாறுதலடைந்து வருகின்றன. அரக்கனொருவன் அயர்ந்தநித்திரையினின்றும் விழித்தெழுவதுபோன்று, முஸ்லீம் உலகமும் கொஞ்சங்கொஞ்சமாக முன்னேறிவருகிறது.

தனதுசெல்வத்தினால் இதுவரை பிழைத்துவந்த ஐரோப்பாவையே ஆட்டிவைக்க முயலுகின்றது ஆபிரிக்கா. உருண்டையான உலகத்தின் உட்பாகத்தில் வெடியதிர்ச்சிபோன்றதொன்று உண்டாகியிருக்கிறது. உண்மையில் நாம்அனைவரும் ஒரே உலகில்தான் வாழுகின்றோம். ஆயினும், இவ்வுலகமானது கவலையிலும், பயத்திலும் மூழ்கிக்கிடக்கின்றது.

இந்த அல்லாடுகின்ற உலகம் உய்வதற்கு ஒரேயொருவழிதான் இருக்கின்றது. அதற்காக இரண்டில்ஒன்று தீர்மானிக்கப்படவேண்டும். ஒன்று அரசாங்கம், வீடுகள், மக்களின் இதயங்கள், ஆத்துமங்கள் முதலியனவற்றில் சிலுவையும், அதன்தெய்வீகச்சட்டங்களும் ஆட்சிசெலுத்தவேண்டும், அல்லது இவ்வுலகமானது பொருள்தேடும் முயற்சியிலேயேமூழ்கி அதன் பாரம் தாங்கமாட்டாமல் அதனடியிலேயே நசுங்கி அழிந்துபோகவேண்டும்.

இந்தப்போராட்டத்தை நாம் இருவிதமானஉருவில் காண்கிறோம். அட்லாஸின் இராக்கதஉருவம் உலகின் பாரம்தாங்காமல் நெளிந்து வளைந்துகொண்டு, முக்கிமுனகித் திணறுவது ஒன்றாகும். அதுதான் நமது நவீன மனிதன். இவ்வுலகமானது அவனுக்கு அளவுக்குமிஞ்சிய சுமையாயிருக்கிறது. மனிதன் அதன்கீழ் ஓர்அறியாக் குழந்தைபோன்று இருந்துகொண்டு, சர்வேசுரனுடைய இஷ்டப்பிரசாதத்தையோ, உதவியையோ விரும்பாமல், மேலும் அவரிடம் விசுவாசம்கூடவைக்காமல் அவதிப்படுகிறான்.

இரண்டாவது உருவம் என்னவெனில், பெரியவெள்ளிக்கிழமையன்று பாரமானசிலுவையைச் சுமந்துசென்ற தேவமனிதனாகும். அவர் மற்றவர்களின் பாவசுமையைத் தம்மீது சுமந்துகொண்டு சுயநலத்தையும், பாவத்தையும் பரித்யஜித்துத் தேவசிநேகத்துடனும், பிறர்சிநேகத்துடனும் இருந்தால்தான் உலகத்தை உய்விக்க முடியுமென நமக்குஉணர்த்துகிறார்.

சிறிதளவாயினும் சுமைதாங்காமல் எவரும் இச்சங்கடத்தினின்றும் தப்பமுடியாது. உலகின் அடியினின்றும் அட்லாஸ் ஒருபோதும் மீளமுடியாது. ஆனால், சிலுவையைச் சுமந்துசென்ற மனிதனோ அதன் அடியினின்றும் மீண்டுவருவான். ஏனெனில், அது உயிர்த்தெழுதலுக்கு அவனைஅழைத்துச்சென்று, பரலோகத்தில் அவனுக்கு முடிசூட்டுவிக்கின்றது.

நாம் தெரிந்துகொள்ள வேண்டியது இதுதான் : உலகத்தைப் புரட்சிகரமாக மாற்றியமைத்து, அதனுள்ளே மாய்ந்துபோவது, அல்லது நம்மை நாமே திருத்திக்கொண்டு உலகை உய்விப்பது. இவ்விரண்டில்ஒன்றை நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

கிறீஸ்துநாதரை எதிர்த்து, அவர் திரும்பவும் உயிர்த்தெழ மாட்டாரெனக் கூறிக்கொண்டே முத்திரைவைத்துக் காவல்புரியும் கம்யூனிஸ்த தலைவர்களும் இருக்கிறார்கள். ஆனால், கல்லறையின் முத்திரையைத் தகர்த்துவந்த ஆண்டவர் அதனை மற்றுமோர்முறை தகர்ப்பார்.

ஈஸ்றர்நாள் காலை சம்மனசுகள் "அவரை அவர்கள்வைத்த இடத்தைப் பாருங்கள்" என்றனர். கல்லறை காலியாக இருந்தது. காயங்கள் இப்போது தழும்பாகிவிட்டன. 50 ஆண்டுகளுக்குள் கம்யூனிஸம் ஏதோ ஒருமறைந்த ஞாபகமாயிருக்கும். தனது தோள்களின்மீது உலகினைத் தூக்கிச்செல்லமுயன்ற கம்யூனிஸம் பாரம் தாங்காமல் முறிந்துபோகும். மேலும் ஒருநாள் ருஷியாவும் விசுவாசம்பெறும். வேதகலாபனைகாரரே அர்ச். சின்னப்பரைப்போல் கிறீஸ்துநாதரின் அப்போஸ்தலராக மாறுவர். தமது ஞானச்சரீரத்தில் இருந்துவரும் கிறீஸ்துவானவர்மீது அச்சமயத்தில் அவருடைய விரோதிகள் வாழ்த்துக்கீதம் பாடுவர். அன்றையதினமே நமது உலகின் "உயிர்த்தெழுதலின் நாள்."

## மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இரட்டிப்பான பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்கள். (1) தேவநிந்தை. ஏனெனில், குருவானவரின்வாயால் தேவன் பொழியும்வேதவாக்கியங்களை—சீவியவார்த்தைகளை—ஞானவிதைகளை அலட்சியம்செய்து அவற்றையெல்லாம் புறக்கணித்து ஒதுக்கித்தள்ளுகிறார்கள். தேவனைநிந்தாட்சணை செய்கிறார்கள்—இஸ்பிரீத்துசாந்துவை எதிர்க்கிறார்கள். (2) குருநிந்தை. ஏனெனில், இவ்விதஅடாதசெயலினால் ஓர்குருவானவரின் கனகனத்தை இகழுகிறார்கள். அவரதுபிரசங்கத்துக்கு இவ்விதம் எவ்விதசெல்வாக்கும் கொடாதபட்சத்தில், அவரை அவமதிக்கிறார்கள் — நிந்திக்கிறார்கள் — கௌரவக்குறைவாய் மதிக்கிறார்கள். மறுபுறம் இவற்றால் தங்கள் சொந்தஆன்மாவுக்கே நட்டத்தையும், நித்தியகேட்டையும் வருவிக்கிறார்கள். ஆகவே, இத்தனைபேரும் முதலாம் வகுப்பைச் சேர்ந்தவர்கள். சாத்தான் ஆகாயத்துப்பறவைபோல் வந்து, குருவானவர்விதைத்த விதைகள்ஒன்றும் இவர்களின் இருதயபூமியில் விழவிடாமலும், விழுந்தவைகளைத் தங்கவிடாமலும் கொத்திக்கொண்டு பறக்கிறான். இவர்களெல்லாம் வெறும் ஆட்களாகவே கோவிலுக்குவந்து வெறும்ஆட்களாகவே தங்கள்வீடுபோய்ச் சேருகிறார்கள். இவர்கள் வேதவாக்கியங்களை—சீவியவார்த்தைகளைப் பசியாறவந்து, வெறும்பட்டினியாய்த் தங்கள் இல்லம்போய்ச் சேருகிறார்கள். குருவானவரும் தமதுகண்டங்கிழியக் கத்தியதுதான் மிச்சம்.

இரண்டாவதுவகுப்பினர் யார்? இவர்கள் குருவானவர் செய்யும் பிரசங்கத்தைக் கவனமாய்க் கேட்பார்கள். ஆனால், இவர்களில் போதியவிசுவாசமும்,வேதாபிமானமுமில்லாதபடியால், கோவில்ஆராதனைமுடிந்து வெளியேறியதும் தாங்கள்கவனமாய்க்கேட்ட எல்லாவற்றையும் நின்றஇடத்தில்தானே மறந்துவிட்டு — காற்றிலே பறக்கவிட்டுப் போகிறார்கள். இவர்களும் தாங்கள்கேட்ட பிரசங்கத்தால் எவ்வித பிரயோசனமுமின்றியே வெறும்ஆட்களாய்—ஞானப்பட்டினியாய்த் தங்கள் வீடுபோய்ச்சேருகிறார்கள்.

இனி மூன்றாவதுவகுப்பினர் யார்? இவர்கள் இரண்டாவது வகுப்பாரைப் போது கருத்தாகப் பிரசங்கத்தைக் கேட்பவர்கள்தான். ஆனால், இவர்களில் போதியதேவபக்தி—தேவநேசம் இல்லாமையால் தங்கள் குடும்பகஷ்டங்கள்—கவலைகள்—வியாதிவருத்தங்கள் முதலாம்இன்னல்கள் முள்ளுப்பற்றைபோல் கிளம்பித் தலைகாட்டும்போது, விசுவாசமும், தேவநேசமும் குளிர்ந்து விறைத்துப்போக இவர்கள் இடர்ப்பட்டு, தாங்கள்கேட்ட பிரசங்கத்தால்எவ்வித நற்பிரயோசனத்தையும் பெறாமல் பரிதாபத்துக்குரியவிதமாய்த் தேவனை நிந்தித்துநடக்கிறார்கள். சர்வேசுரன் தங்களுக்குஅனுப்பும் கஷ்டநஷ்டங்களெல்லாம் — சிறு சிலுவைகளெல்லாம் அவரது அன்பின் கொடைகளென இவர்கள் அவற்றை மதித்துக் கனம்பண்ணத் திராணியற்றவர்களாய்ப் போகிறார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் விநோதங்கள்

சிங்களமக்கள்வசிக்கும் தொகுதி ஒன்றிலே சிங்களத்துக்கும், தமிழுக்கும் சமஅந்தஸ்து அளிக்கவேண்டுமென்று நியாயமெடுத்து வாதிக்கும் அரசியல்வாதிஒருவருக்குப் பொதுத்தேர்தலிலே பொல்லாதகாலம் சொல்லாமலேவருமென்று சொன்னவர்களுமுண்டு. ஆனால், தேர்தல்முடிபுகளைக் கவனிக்குமிடத்து, இடதுசாரிக்கட்சிகள் — விசேஷமாய் ரொட்ஸ்கியின் கொள்கைகளைப் பின்பற்றும் லங்கா சமசமாஜக்கட்சியானது சிங்களமும், தமிழும் அரசாங்க பாஷைகளாக இருந்துவர வேண்டுமென்று வாதாடிய போதிலும் தேர்தலிலே யாதாமோர் பங்கமுமில்லாது சிறந்த வெற்றிஈட்டியிருக்கின்றது. சிங்களத்தொகுதிகளிலே லங்கா சமசமாஜக்கட்சி தனது ஸ்தானங்களையெல்லாம் திரும்பவும் கைப்பற்றியிருக்கின்றது. களனியிலே சென்றமாசிமாத இறுதியில் நடந்தேறிய ஐக்கியதேசியக்கட்சியின் எட்டாவது வருடாந்த மகாநாட்டில் "சிங்களம் மாத்திரமே" என்ற பிரேரணையை எடுத்தாண்டவரான திரு. டி. சி. டபிள்யு. கன்னங்கரா அவர்கள் லங்கா சமசமாஜக்கட்சியின் காரியதரிசியான திரு. லெஸ்லி குணவர்த்தன அவர்களாலே தோற்கடிக்கப்பட்டமை எவர்க்குமே ஆச்சரியம்விளைப்பதாகும். போதாக்குறைக்கு இவரின்மனைவியாரான திருமதி விவியென்னே குணவர்த்தன கொழும்பு வடக்குத்தொகுதியின் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார். அதே பாராளுமன்றத்திற்குக் கணவரும், மனைவியுமாகத் தம்பதிகள்இருவர் ஒருங்கே முதன்முதலாகத் தெரிவுசெய்யப்பட்டமை இதுவே முதன்முறையாகும்.

* * *

பாராளுமன்ற சனப்பிரதிநிதிகள் சபைப் பிரதிநிதிகளாகத் தற்போது தெரிவு செய்யப்பட்டவர்களில் குணவர்த்தனஎன்ற பெயருள்ளவர்களாய் ஆறு பேர் இருக்கின்றார்கள். திரு. பிலிப் குணவர்த்தன, இவர்மனைவியான திருமதி குஸுமா குணவர்த்தன, திரு. லெஸ்லி குணவர்த்தன, இவர் மனைவியான திருமதி விவியென்னே குணவர்த்தன, திரு. பிலிப் குணவர்த்தனவின்சகோதரரான திரு. றொபேட் குணவர்த்தன (கோட்டேப்பிரதிநிதி), திரு. சோல்மண்ட்லி குணவர்த்தன (கழுத்துறைப்பிரதிநிதி). அதே பெயரைத்தாங்கிய பாராளுமன்றப் பிரதிநிதிகளின் மிகப்பெரியகுழு இதுவாகும்.

* * *

முதலாவது பாராளுமன்றத்தில் ஐந்து சேனநாயகாக்கள் இருந்தார்கள். திரு. டி. எஸ். சேனநாயகா, திரு. டட்லி சேனநாயகா, திரு. ஆர். ஜி. சேனநாயகா, திரு. மைத்திரிபாலா சேனநாயகா, திருமதி புளோறென்ஸ் சேனநாயகா (கிரியெல்லைப் பிரதிநிதி) என்பவர்களே இந்தஐவருமாவர். இன்னும் அப்பாராளுமன்றத்தில் நான்கு டி சில்வாக்கள் (திரு. கொல்வின் ஆர். டி. சில்வா, திரு. ஜோர்ஜ் ஈ. டி சில்வா, திரு. ஜோர்ஜ் ஆர். டி சில்வா, திரு. பி. எச். வில்லியம் டி சில்வா) இருந்தார்கள். இரண்டாவது பாராளுமன்றத்தில் மூன்று ஜயவர்த்தனக்களும், மூன்று கொத்தலாவலகளும், மூன்று பெரேறாக்களும் இருந்தார்கள்.

சென்றபொதுத்தேர்தலிலே கல்முனைத்தொகுதிக்குச் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்ட ஜனாப் அப்துல் மஜீட் அவர்களின் ஆதரவாளராயிருந்த சம்மாந்துறையைச்சேர்ந்த வாலிபர்ஒருவர் அன்று ஓர்செருப்பினால் ஐம்பதுஅடிகள் வாங்கிக்கொண்டார். இவ்விதம்இவர் அடித்தண்டனை பெற்றுக்கொள்ளக்காரணம் பொதுத்தேர்தலின்போது பிடித்துக்கொண்ட பந்தயமேயாகும். கல்முனைத்தொகுதிக்குத் தமிழரசுக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட்ட அரசவாசல்முதலியார் எம். எஸ். காரியப்பர் அவர்கள் தேர்தலில்வெற்றிபெறுவாரானால் செருப்பினால் ஐம்பதுமுறை தனக்குஅடிக்கலாமென்று கல்முனைவாசிஒருவருடன் இவர் பந்தயம் போட்டுக்கொண்டாராம். அரசவாசல் முதலியார் காரியப்பர் வெற்றிபெற்றமையால் ஐம்பதுசெருப்படிகளையும் சந்தோஷமாகப்பெற்றுக்கொண்டார்.

* * *

புதியபாராளுமன்றத்திலே மத்திய கொழும்புத்தொகுதிப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவரான திரு. எம். எஸ். தேமிஸ்என்பவருக்கு ஓர் காரை அன்பளிப்புச் செய்யும்விஷயமாய் அகில—இலங்கைத் தபால்—தந்தி ஊழியர்கள் ஐக்கியசங்கம் இவ்வாரத்தில் கூடவிருக்கின்றது. இவர்முன்பு தபால்-தந்திஊழியர்களில் ஒருவராயும், அவர்களது இந்தஐக்கியசங்கத்தின் பொதுக்காரியதரிசியாயுமிருந்து சில மாதங்களின்முன் பலவந்தத்தின்பேரில் இளைப்பாறலாயினர்.

* * *

சென்றபொதுத்தேர்தலிலே பாராளுமன்றத்துக்கு ஐக்கியதேசீயக் கட்சிப் பிரதிநிதிகளாக மலைநாட்டுத் தொகுதிகள் இரண்டிற்குத் தெரிவு செய்யப்பட்டஇருவர் அடுத்தசில தினங்களிலே திரு. பண்டாரநாயகாஅவர்களைத் தலைவராகக்கொண்ட மக்கள்ஐக்கியமுன்னணியில் சேர்ந்து கொள்வார்கள்போல் இருக்கிறது. அங்ஙனம் இருவரும் சேர்ந்துகொள்ளுமிடத்துச் சனப்பிரதிநிதிகள்சபையிலே ஐக்கியதேசீயக்கட்சியின்பலம் எட்டுப் பேரிலிருந்து ஆறாகக்குறைந்துவிடும்.

* * *

வத்தேகாமத்தொகுதியைச்சேர்ந்த தெல்தெனியாவிலே அரசாங்கபகுதி ஒன்றில் உத்தியோகம்வகிக்கும்ஒருவர் அத்தொகுதிக்கு ஐக்கியதேசீயக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டவரும், முன்னைநாள் உள்நாட்டு மந்திரியாருமான திரு. ஏ. இரத்நாயகாஅவர்கள் தேர்தலில் தோல்வியடைந்தால் தனது தலையை மொட்டையடிப்பதாகப் பந்தயம்பிடித்திருந்தார். தேர்தல்முடிவு அறிவிக்கப்பட்டுத் திரு. ஏ. இரத்நாயகா தோல்வியடைந்ததும் அவர் அவசரம்அவசரமாக வீட்டுக்குச்சென்றார். மறுநாட்காலை தலையைமொட்டையடித்துவிட்டு ஓர்கைலேஞ்சியால் அதை மறைத்துக்கொண்டு உத்தியோகதானஞ் சென்றார். இவ்வாறு பந்தயம்பிடித்து மொட்டையடித்துக் கொண்டவர் இவர்ஒருவர் மாத்திரமல்ல, பலராவர்.

## சலேத்மலை இரகசியங்கள்

புரட்டாசிமாதத்தில் ஓர்நாள் மத்தியானவேளை. பிள்ளைகள்இருவர் பகல் முழுவதும் தங்கள் பசுமாடுகளை மேயவிட்டுக் காவல்செய்வதற்காக உயர்ந்த அம்மலையின்மேல் ஏறிச்செல்லுகிறார்கள். மாடுகளை மேயவிட்டபின் இருவரும் அயர்ந்து நித்திரை செய்கிறார்கள். பின்னர் எழுந்துபார்க்க, மாடுகளைக் காணவில்லை. அவைகள் கண்ணுக்கெட்டாது அதிகதூரம் சென்றுவிட்டன. பிள்ளைகள் இருவரும் பெரிதும் அச்சமுற்றவர்களாய் அவைகளைத் தேடத்தொடங்குகிறார்கள்.

ஆ! சடுதியாக அவர்கள் கண்டது என்ன? பிரகாசமான ஒரு உருண்டை. அந்தப்பிரகாசத்தின் மத்தியில் ஓர்அழகியமாது கற்களின்மேல் உட்கார்ந்திருக்கிறாள். அவள் அணிந்திருந்த உடைமுழுவதும் பனிக்கட்டியைப்போன்று வெண்மையாயிருந்தது. ஆனால், அந்தஅம்மாள் கவலைதோய்ந்தவளாய் அழுதுகொண்டிருந்தாள்.

இதைக்கண்டதே பிள்ளைகள் பயப்பிராந்திகொள்ளத் தொடங்கினர். அப்போது அந்தஅம்மாள் அழுவதை நிறுத்திவிட்டு, அவர்களைக் கூப்பிட்டாள். அதன்மேல் அவர்கள் இருவருக்கும் சிலஇரகசியங்கள் சொல்லத் தொடங்கினாள். "சனங்கள் தங்கள் பாவங்களால் நமது திருக்குமாரனை நிந்திக்கிறார்கள்; அவர்கள் தங்கள் பாவங்களைவிட்டு மனந்திரும்பித் தபசு செய்யவேண்டும்; அல்லாவிடின் எல்லோரும் சேதமாய்ப்போவார்கள். இதைச் சனங்களுக்கு அறிவியுங்கள்" என்றாள்.

பிரான்ஸ் தேசத்திலுள்ள சலேத் மலையிலே நூறு வருடங்களின்முன் இச்சம்பவம் நிகழ்ந்தது. அப்பிள்ளைகளிலே சிறுவனின்பெயர் மாக்ஸிமின். சிறுமியின்பெயர் மெலானி. இந்த இரகசியங்களைச் சொன்னதும் அந்த அம்மாளின் காட்சிமறைந்தது. அதன்மேல் அவளைக்காணவில்லை. ஆனால், அவள்இருந்த அந்தஇடத்திலிருந்து ஓர் அற்புதநீரூற்றுப் புறப்பட்டு இற்றைவரையும் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தஊற்றின்மூலம் அநேக புதுமைகள் நடந்திருக்கின்றன. பலவருடங்களுக்குமுன் அந்தஇடத்திலே ஓர்அழகான ஆலயம் கட்டியெழுப்பப்பட்டது. உந்நதமான சலேத்மலைமேல் இந்த ஆலயம் மிளிர்கின்றது. ஒவ்வோர்வருடமும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் இந்த உந்நதமலைமேல்ஏறி அப்புனித அற்புத ஸ்தலத்தைத் தரிசித்து வருகிறார்கள். பெருந்தொகையான யாத்திரிகர்கள் அங்குவந்து கூடுவதையிட்டு அநேக குருமாரும் அங்குசெல்லுகின்றனர். அவர்கள் அப்புண்ணிய தலத்தில் தேவதாயார் கேட்டுக்கொண்டதை உலகம்முழுவதும் பிரசித்தப்படுத்தி வருகின்றார்கள்.

தேவதாயார் இந்த உலகத்துக்குத் தூதுஅனுப்ப விரும்பிய போதெல்லாம் சிறுபிள்ளைகளுக்கே எப்போதும் காட்சியளித்து அவர்கள்மூலமே தமது தூது என்னஎன்பதை உலகத்துக்கு அறிவிக்கிறார். பாத்திமாவில் சம்பவித்ததும் இப்படித்தான். லூர்துகெபியில் காட்சியளித்ததும் ஒரு ஏழைச் சிறுமிக்குத்தான். சலேத்மலையில் காட்சியளித்ததும் இரு சிறுபிள்ளைகளுக்குத்தான். இவர்கள் தங்கள் இரகசியங்களை முத்திரையிட்டு மூடிப் பாப்பரசரிடம் கொடுத்துவிட்டனர். அதை வெளிவிடவேயில்லை. அதனால் இவர்கள் சலேத்மலை இரகசியகாரர்என அழைக்கப்பட்டுவந்தார்கள்.

---

### 2-ம் வருட
## மரணஞாபகம்



பிறப்பு: 24-6-36 இறப்பு: 21-3-54

ஜெயநாதன் ஜேம்ஸ்

மண்ணினின்று மறைந்தும் எங்கள் எண்ணம்விட்டு அகலாத எங்கள் அருமை மகனும், அன்பார்ந்த சகோதரனுமாகிய ஜெயநாதன் ஜேம்ஸ் எங்கள்யாவரையும் பரிதபிக்கவிட்டுப் பரமபதம்சேர்ந்த இரண்டாவது வருடம் 21-4-56-இல் பூர்த்தியாகும். அத்தினம் சில்லாலை ஆரோக்கியமாதா ஆலயத்தில் ஓர்துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இவ்வாத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு அன்பர்கள் அனைவரையும் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

பெற்றோர்—சகோதரர்கள்—இனசனர்

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயஆண்டவரின் அனுக்கிரகத்தாலும், பரிசுத்தசதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். திரேசம்மாள் முதலாம் அர்ச்சியசிஷ்டர்களின்சலுகையாலும் நான் எஸ். எஸ். ஸி. பரீட்சையில் அரங்கேறினேன். நன்றியறிதலாக இதனைப்பிரசுரிக்கிறேன். இவர்களின் நாமம் எங்கும்புகழப்படுவதாக.

Christobel

Mannar.

---

### நேர்த்தியின் பூர்த்தி

நாங்கள்விரும்பிய ஒருவருக்கு ஓர்நல்ல விவாகம் சீக்கிரம்செய்துவைக்க எங்களுக்கு ஒத்தாசைசெய்யும்படி சதாசகாய மாதாவை இரந்துவேண்டுதல் பண்ணினோம். நாங்கள்கேட்டபடியே மாதா மலைபோல்குறுக்கிட்டு நின்ற விக்கினங்கள் யாவையும் பரிதிமுன்பனிபோல நொடிப்பொழுதில் அகற்றி, நாங்கள்விரும்பியவாறு எல்லாம்நன்மையாய் முடித்துத்தந்தமைக்காக எங்கள்அத்தியந்த பகிரங்க நன்றியைக் காண்பிக்கும்பொருட்டும், சதாசகாயமாதா பேரில் மற்றவர்களும் சிறந்தபக்தியும், நம்பிக்கையும் கொண்டொழுகும்பொருட்டும் நேர்த்தியின்படி இதனைப்பிரசுரிக்கின்றோம். இன்னும் இப்புதியகுடும்பத்துக்கு வேண்டியவரப்பிரசாதங்களையும் தந்துதவும்படியும் மாதாவை இரந்துவேண்டுகிறோம். சதாசகாய மாதாவின்புகழ் புவியெங்கும் புகழப்படுவதாக.

M. T. L.

---

● யேசுசபையைச்சேர்ந்த வண. மத்தியாஸ் ஹிஸி சுவாமியாரைச் சீனக்கம்யூனிஸ்பொலிசர் கைதுசெய்திருப்பதாகக் ஹொங்கோங்கிலே செய்தி கிடைத்திருக்கிறது. தற்போது செஞ்சீனாவிலே 46 சீன யேசுசபைக்குருமாரும், நான்குஅமெரிக்க யேசுசபைக் குருமாரும் சிறைச்சாலைகளில் இருந்து வருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர்களும் நாமும்

ஜப்பானில் சுற்றுப்பயணஞ் செய்த திரு. தி. மாணிக்கவாசகம் அவர்கள் 'தமிழ் நாடு' பத்திரிகையில் 'சப்பான் செலவு' என்றதலையங்கத்துடன் எழுதிவரும் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டதே அடியில்வருவது.

"'நாம் இப்பொழுதுதான் உரிமை பெற்றோம். ஆகையால் தவறுநடப்பது சகசம்' என்று நம்மவர் கூறுகின்றனர். உழைத்து முன்னேறவேண்டுமென்ற எண்ணம் ஜப்பானியரிடம் இருக்கிறது. குறைகூறிக் கொண்டு சோம்பேறித்தனமாக இருக்கும்நிலை நம்மிடையே உள்ளது.

ஜப்பான்நாட்டில் மக்கள் தொகை பெருகியுள்ளது. தாதுப்பொருள்கள் மிகவுங்குறைவு. ஆயினும், அவர்களுக்கு மனதிலே உறுதியிருக்கிறது. உழைத்து முன்னேற வேண்டுமென்ற எண்ணமும் அவர்கள்மனதில் முற்பட்டு நிற்கிறது. ஆகையினல், அவர்கள் போரின்கொடுமைக்கு இரையாகியபின்பும் தொழிலியலிலே முன்னணியிலிருக்கின்றனர்......"

"நம்நாட்டுத்தொழிலாளிகள் வேறுநாட்டுத் தொழிலாளிகளைவிட எந்த வகையிலும் தாழ்ந்தவர்களல்லர். நம்நாட்டில் பொருத்தப்பட்டிருக்கும் எந்திரங்களும் இத்நாடுகளில் இயங்கும் எந்திரங்களுக்கு எவ்வகையிலும் குறைவானவையல்ல. பின் ஏன்நாம் அவர்களைப் பின்பற்றலாகாது?

பஞ்சாலைத்தொழிலை எடுத்துக் கொண்டால், நாம் ஜப்பானியர்களைக் காட்டிலும் நல்லநிலைமையில் இருக்கிறோம் என்றுதான் சொல்லவேண்டும். அவர்களுக்கு மூலப்பொருள்கள் கூடுதலான விலையில் வெளிநாட்டிலிருந்து வரவேண்டும். ஆனல், நமக்கோ உள்நாட்டில் குறைந்தவிலையில் பஞ்சுகிடைக்கிறது. இந்தவாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு நாம் உலக வாணிக அரங்கைக் கைப்பற்றிக் கொண்டு மேம்படலாம். ஆனல், இரண்டுகாரணங்களினுல் நாம் இந்த அரியவாய்ப்பை இழந்துவிட்டோம். ஒன்று, நம்முடைய மூலப்பொருள்களின்விலை குறைவாயிருந்தபோதிலும் நம்முடைய வேலையளவு குறைவாக இருக்கின்ற காரணத்தால் நமது உற்பத்திச்செலவு அதிகமாகிறது. ஆகையால், நாம் குறைந்தவிலையில் நல்ல சாக்குகளை வெளிநாட்டிற்கு அனுப்ப முடியாமல் போய்விடுகிறது. இரண்டாவதாக, நாம்வாணிகநாணயத்தைக் கருத்திற்கொள்ளாமல் திறமில்லாத சாக்குகளை வெளிநாட்டுக்கு அனுப்பி அங்கு நம் நாட்டின்பெயரைக் கெடுத்துக்கொண்டுவிட்டோம். திறமான சரக்குகளை அனுப்பவேண்டுமென்ற எண்ணம் எப்பொழுது நம் வணிகர்களுக்கு ஏற்படுகிறதோ அப்பொழுது தான் நம் முன்னேற முடியும்."

### நேர்த்தியின் பூர்த்தி

திவ்வியயேசுவின் கருணையாலும், சதா புதுமைமாரி பொழியும் பரிசுத்த சகாய மாதாவின் அன்புள்ள மன்றாட்டாலும் நான் நெடுநாளாக ஆவலுடன் ஆசித்துப் பிரார்த்தித்தசகாயம் கிடைக்கப்பெற்றதினல், நேர்த்தியின்பிரகாரம் இதனைப் பிரசுரஞ்செய்கிறேன். பிரசுரிக்கத் தாமதமானதினல் தேவதாயாரிடம் மன்னிப்புக் கோருகிறேன். தேவஅன்னையின் நாமம் என்றும் எங்கும் புகழப்படுவதாக.

தேவதாயின் அன்புள்ளமைந்தன்,
காம்பொன். G. F. A.

### நன்றியறிந்த தோத்திரம்

நான் மூன்றுவருஷங்களாக எடுத்த பரீட்சையில் சித்தியடையாமல் கடைசியில் அர்ச். தீற்றம்மாளிடம் மிகவும்இரக்கமாகமன்றடி நான்காவது வருடம் அவவின் அருளினலே பரீட்சையில் சித்தியடைந்தேன். அவவின்நாமம் உலகமெல்லாம் புகழப்படுவதாக. இன்னும் என் அவசரங்களில் உதவிசெய்யும் அர்ச். பத்தாம் பத்திநாதர், அர்ச். அந்தோனியார், பரிசுத்த தேவமாதாவின் திருநாமங்களும் வாழ்த்தப்படுவதாக. நேர்த்தியின் படி இதனைப்பிரசுரஞ் செய்கின்றேன்.

M. T.

## சுதேச வர்த்தமானம்

### பிரதிநிதியின்கேள்வி மறுக்கப்பட்டது

அரசாங்க பாராளுமன்றகட்சியின் முதலாவதுகூட்டம் சென்றஞாயிற்றுக்கிழமை கூடியது. அக்கட்சியில்சேர்ந்துகொள்வதற்காகப் பட்டிருப்புத்தொகுதித் தமிழ்ப்பிரதிநிதியான திரு. எஸ். யு. எதிர்மன்னசிங்கம் செய்துகொண்ட விண்ணப்பம் கூட்டத்தின் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிராகரித்து விடப்படலாயிற்று. மொழிப்பிரச்சினைவிஷயமாய்த் தனதுஎண்ணப்படியே வாக்களிக்கத் தமக்குஅனுமதியளிக்க அரசாங்க பாராளுமன்றகட்சி சம்மதித்தால் தாம்அக்கட்சியுடன் சேர்ந்துகொள்வதாக அவர் தமதுமனுவில் அறிவித்திருந்தாரெனத் தெரியவருகிறது.

### புதிய மந்திரிசபை

பிரதமர்பதவி ஏற்றுக்கொண்ட திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா அவர்கள் சென்றவியாழக்கிழமை பிற்பகல் தமதுமந்திரிசபையின் பதின்மூன்று மந்திரிமார்களினதும் பெயர்களைக் கவர்னர்-ஜெனறலிடம் சமர்ப்பித்தார். அவர்களின் நாமங்கள் வருமாறு:

(1) திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா — பிரதம மந்திரி, (பாதுகாப்பு — வெளிநாட்டு விவகாரப்பகுதிகள்.)
(2) திரு. சி. பி. டி.சில்வா — காணி, காணிஅபிவிர்த்தி மந்திரியும், சபை முதல்வரும்.
(3) திருமதி விமலா விஜயவர்த்தன— சுகாதாரமந்திரி.
(4) திரு. டபிள்யு. தஹநாயகா — கல்விமந்திரி.
(5) எம். டபிள்யு. எச். டி சில்வா, கியூ. சி., — நீதிமந்திரி.
(6) திரு. பி. எச். வில்லியம் சில்வா— கைத்தொழில் — கடற்தொழில் மந்திரி.
(7) திரு. பிலிப் குணவர்த்தன —கமத்தொழில் — உணவு — கூட்டுறவு அபிவிர்த்தி மந்திரி.
(8) திரு. ரி. பி. இலங்கரத்தின — தொழில்—வீடமைப்பு — சமூக சேவா மந்திரி.
(9) செனற்றர் ஏ. பி. ஜயசூரியா — உள்நாட்டு மந்திரி.
(10) திரு. ஜயவீர குறுப்பு— தல தாபன—கலாச்சார மந்திரி.
(11) ஜனுப் சி. ஏ. எஸ். மரைக்கார்— தபால்—வானெலி மந்திரி.
(12) மைத்திரிபால சேனநாயகா— போக்குவரத்து மந்திரி.
(13) திரு. ஸ்ரான்லி டிசொய்சா —நிதி மந்திரி.
(14) திரு. ஆர். ஜி. சேனநாயகா — வர்த்தக மந்திரி.

### தபாற்சலார் குறையுமா?

தபால்-வானெலி-செய்திப் புதியமந்திரியாரான ஜனுப் சி. ஏ. எஸ். மரிக்கார் சென்ற வியாழக்கிழமை முதன்முதலாக வானெலிமூலம் நிகழ்த்திய சொற்பொழிவிலே, தாம்முதலில் கவனிக்கவிருக்கும் விஷயங்களில், தபாற்சலார்விகிதத்தைக் குறைப்பதும் ஒன்றெனத் தெரிவித்திருக்கின்றார்.

### புத்தகுருவின் சற்போதகம்

"நாடுமுழுவதும் சுற்றித்திரிந்து மறுசமயத்தைஎதிர்த்துக் குரோதவிரோதத்தைப் போதிக்குஞ்சுபாவம் ஒருபாலாரான புத்தபிக்குகளுக்கும், புத்தர்களுக்கும் இருந்துவருகிறது; ஆனல், அத்தகையபிரசாரம் புத்தசமயத்துக்கு எத்துணைபிரதிகூலமான காரியங்களை உண்டுபண்ணுகிறதென்பதை இவர்கள் அற்பமாகவேஉணருகிறார்கள்" என்று தீயத்தலாவையிலுள்ள அழுத்வெலே ஸ்ரீகங்காராம விகாரைமைதானத்தில் சென்றசெவ்வாய்க்கிழமை நிகழ்ந்த குற்றத்தடைக் கூட்டத்தில் பண்டித அமரஞான தேரோ என்னும் புத்தகுரு பேசியிருக்கின்றார். திரிபித்தகவின்முப்பகுதிகளில்ஒன்றான 'வினய' என்பதைப் படித்தறிந்த எந்தப்புத்தபிக்குவாவது, சாதாரணபுத்தராவது மறுசமயத்தைத் தாக்கத் துணியவேமாட்டார்களென்றும், துவேஷத்தை ஒருபோதுமே புத்தர் போதிக்கவில்லையென்றும், புத்தசமய சரித்திரத்தில் மறுசமயத்தை அவமதிக்கவேண்டுமென எங்காவது சொல்லப்படவில்லையென்றும் மேலும்அவர் கூறிநின்றார்.

### மன்னரும் குடிதண்ணீரும்

கடும்வரட்சி ஏற்பட்டகாரணமாகக் குழாய்மூலம் மன்னார்ப்பட்டினத்துக்கு வழங்கப்படும் குடி தண்ணீரானது உவர்நீராகியிருக்கின்றது. இலங்கையின் மற்றும்அநேக பகுதிகளிற்போன்று மன்னாரிலும் சென்றவருடம் கடும் வரட்சிஏற்பட்டு, ஒவ்வோர் வரட்சியோடும் அதன் குடி தண்ணீரின் உவர்த்தன்மையும் அதிகரித்திருக்கின்றது. வரட்சி ஏற்படும்போதெல்லாம் மன்னார்ப்பட்டினத்துக்கு நல்ல தண்ணீர்உதவும் தோட்டக்காட்டிலுள்ள கிணறுகளின் தண்ணீரிலும் உவர்த்தன்மை ஏற்பட்டு அதிகரித்துவருகின்றது. அதனுல் நல்லகுடி தண்ணீர் வியாபாரம் அதிகரித்து, ஓர்தகரம்தண்ணீர் 25சதமாக விலைப்படுகிறது.

### காலநிலை

மழைக்கோலம் காணப்பட்டபோதிலும், இடையிடையே காற்றுவீசிக் கொண்டு வந்தபோதிலும் வெயில் அகோரம் தாங்கமுடியாதிருக்கிறது. நெடுநாள் மழைபெய்யாதகாரணமாகத் தீவுப்பகுதிகளிலே மக்கள் தண்ணீருக்குப் பெருங்கஷ்டப்படுகின்றார்கள்.

> **தன் சொந்த நலனைப் பாராட்டாமல் சமுதாயத்துக்காக உழைக்கிறவன் அதிகஞ் செய்கிருன்.**

### தூக்குத்தண்டனை நிறுத்தம்

மரணதண்டனையை நீக்கும்விஷயமாய்த் தீர்க்கமான ஓர்முடிபு செய்யப்படுகிறவரையிலே மரணதண்டனைவிதிக்கப்பட்டுச் சிறைச்சாலைகளில் இருந்துவருகின்ற மறியற்காரரைத் தூக்கிவிடுவதை நிறுத்திவைக்கவேண்டுமென அரசாங்க பாராளுமன்றகட்சி சென்ற ஞாயிற்றுக்கிழமை தனது முதலாவது கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிறது. அதனுல் மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கின்ற 19 பேருக்குத் தங்கள் தண்டனையில் மாற்றம்கிடைக்குமென்ற ஓர்நம்பிக்கை தற்போது பிறந்திருக்கிறது. இவர்களில் 14 பேர் வெலிக்கடைச்சிறைச்சாலையிலும், 5 பேர் போகாம்பர சிறைச்சாலையிலும் இருந்து வருகின்றனர். இவர்களில் முதன்முதலாகத் தூக்கிவிடப்படவிருந்தவர் ஈறிக் பச்சோஎன்ற பேர்க்கவாலிபரே. இவர் நாளைநின்றுவரும 21-ந் திகதி சனிக்கிழமை தூக்கிவிடப்படவிருந்தார்.

### எதிர்க்கட்சித் தலைவர்

பாராளுமன்ற எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் சென்ற புதன்கிழமை காலை நடத்திய விசேஷகூட்டம ஒன்றிலே டக்றர் என். எம். பெறேரு அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராகத் தெரியப்பெற்றிருக்கின்றார். மூதூர்ப்பிரதிநிதி ஜனுப் எம். ஈ. எச். முகமத்அலி அவர் பெயரைப் பிரேரேபிக்க, கற்குடாப் பிரதிநிதி ஜனுப் ஏ. எச். மாக்கன் மரைக்கார் அனுமதித்தார். இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சேர் ஜோண் கொத்தலாவல அவர்களும், மற்றும் ஐக்கியதேசியக்கட்சிப் பிரதிநிதிகளும் தந்திமூலம் அழைக்கப்பட்டும் அவர்களில் எவருமே கூட்டத்துக்கு வரவில்லை.

### 15 நாள்—26 கொலைகள்

இலங்கையிலே நிகழும் சித்திரைமாதத்தின் முதற்பதினைந்து தினங்களிலும் 26 கொலைகள் நடைபெற்றிருப்பதாய்க் கண்டறியப் பட்டிருக்கிறது. இவ்வருடத்திலே இம்மாதம் 15-ந்திகதிவரையிலுள்ள 106 தினங்களிலும் எல்லாமாக நடைபெற்றுள்ள கொலைகள் 120. சென்றவார இறுதியில் மாத்திரம் பத்துக்கொலைகளுக்குமேல் நிகழ்ந்திருக்கின்றன.

### திரு. ஆர். ஜி. சேனநாயகா

சனப்பிரதிநிதிகள்சபையிலே தம்பதேனியா, களனிஎனும் இருதொகுதிகளினதும் பிரதிநிதியான திரு. ஆர். ஜி. சேனநாயகா சென்றபுதன்கிழமை ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியில் சேர்ந்திருக்கின்றார். அதனைத்தொடர்ந்து வர்த்தகமந்திரியாராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றார். பின்னர் இராணிமாளிகைசென்று, வர்த்தகமந்திரியாராக விசுவாசப்பிரமாணமுஞ் செய்துகொண்டார். திரு. டட்லிசேனநாயகா, சேர் ஜோண் கொத்தலாவலஆகிய இருவரதும் மந்திரிசபைகளிலே இவர் வர்த்தகமந்திரிபதவிவகித்திருந்து, பின்னர் இந்திய பிரசாஉரிமைப்பிரச்சினை காரணமாகத் தமதுபதவியை இராசினாமாச்செய்தார்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 19 1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனித வீரர்



## அன்னையின் அபூர்வ நாமங்கள்

**குகை மாதா :**

தேவமாதாவுக்கு இத்தாலிய மக்களால் "குகை மாதா" என்னும் பெயர் கொடுக்கப்பட்டது. இந்தப் பரிசுத்த ஸ்தலம் இத்தாலியில் றப்போலோ என்னும் இடத்தில் உண்டு.

**களஞ்சியத்தின் மாதா :**

களஞ்சியத்தின் மாதா மட்றிட் பட்டணத்தின் பாதுகாவலாளி. சமீபத்தில் இப்பரிசுத்ததாயின் திருச்சுரூபத்திற்கு ஆயிரக்கணக்கான விசுவாசிகளின் மத்தியில் அலங்காரமான முடிசூட்டப்பட்டது. இவ்வலங்கார முடி விலைமதிக்கரிய அழகிய இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்டு உயர்ந்த வேலைப்பாட்டைக் கொண்டது. இக்கற்கள் ஏறக்குறைய இரண்டுகோடி பெசற்றாஸ் என்னும் ஸ்பானிய நாணயமதிப்புடையது. இதற்குரிய நிதி ஜெனறல் பிறுங்கோ என்பவரின் உதவியால் சேகரிக்கப் பட்டது.

மூஸ்லீங்கள் மட்றிட் பட்டணத்தைக் கைப்பற்றிய போது இத் திருச்சுரூபத்தையும்கைப்பற்றி விசுவாசிகள் அறியா வண்ணம் ஒளித்து விட்டார்கள். அதன் பின் ஏறக்குறைய நானூறுண்டுகளின் பின் தானியக்களஞ்சியங்கள் மத்தியில் கண்டுபிடிக்கப்பட்டது. இதனுலேயே அது களஞ்சியத்தின் மாதாஎன்று விசுவாசிகளினுல் அழைக்கப்படுகின்றது.

**பீப்பா மாதா :**

கலிபோர்ணியாவில் உள்ள சோமா என்னும் அழகிய பள்ளத்தாக்கிலுள்ள அஸ்ரி என்னும் இடத்தில் கட்டப்பட்ட கார்மேல் மாதாவின் கோவிலைப் பீப்பா மாதா கோவில் என்று அழைப்பர். இக்கோவில் பீப்பாபோல் வளைந்து அந்நாட்டு மக்களின் கைவேலைத்திறமையை எடுத்துக்காட்டுகிறது. கலிபோர்ணியாவின் பிரசித்திபெற்ற திராட்சைத் தோட்டப் பகுதியில் இத்தேவாலயம் கட்டப்பட்டுள்ளது. திராட்சைக்கொடிகள் தேவாலயத்தின் வாசல்மட்டும் படர்ந்து மேலும் அழகைக்கொடுக்கின்றன. குடியேற்றத்தைச் செப்பனிடுவோர் இக்கிராமத்திற்கு "அஸ்ரி" என்னும் பெயரை இட்டனர்.

**வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே :**

அர்ச். பிலிப்புநேரியார் ஓர்முறை கடின நோயாய் விழுந்தார். அவரைப் பராமரித்த டக்ரரும், குருமாரும் அவர் தப்பாது சாகப்போகிருர்என்றெண்ணி அவரின் படுக்கையைத் திரைச்சீலை கொண்டு மூடினுர்கள். அந்நேரம் "ஓ! என்னுடைய ஆசீர்வதிக்கப்பட்ட அழகுள்ள சீமாட்டியே! என்னுடை பரிசுத்த சீமாட்டியே!" என்று ஓர்சத்தம் உண்டானது. அவ்வறை நடுநடுங்கியது. குருமாரும், டக்ரரும் திரைச்சீலையை நீக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிப் பார்த்தபோது அர்ச். பிலிப்பு நேரியார் கைகளை மேலேஉயர்த்தி முழங்காலை, முழங்காலில் இருப்பதைப்போல் மடித்துக் கண்களை மேலே உயர்த்தி அழுவதையும், "இல்லை .... நீர் என்னிடத்தில் வருவதற்கு நான் தகுந்தவன் அல்ல. நீர் என்னிடத்தில்வர நான் யார்? ஓ! அழகுள்ள சீமாட்டியே!" என்று சொல்லிக்கொண்டிருப்பதையும் அவர்கள் கண்டார்கள். பின்பு பிலிப்பு நேரியார் சுகநிலைக்கு வந்ததும் கட்டிலில் படுத்துக்கொண்டு படுக்கைவிரிப்பைத் தலைக்குமேல் இழுத்து மூடிக்கொண்டு கண்ணீர் ஆறாய்ஓட அழுதார். பின்தமது பக்கத்தில்நின்ற வயித்தியரைப்பார்த்து: "இப்பொழுது நீர் எனக்குத் தேவையில்லை, பரிசுத்த கன்னிகை என்னைக் குணப்படுத்தி விட்டாள்" என்று கூறினர்.

சுபம்!

—※—

# வெள்ளிக் குருசின் வெற்றி

இயங்கங்குளம் ஓர் அழகிய கிராமம். நாற்புறமும் வயல்களால் சூழப்பட்டிருப்பதை நாம் காணலாம் அக்கிராமத்தின் மத்தியில் ஓர்பள்ளிக்கூடம். அப்பள்ளிக்கூடமே அக்கிராமத்தை அழகுபடுத்திக் கொண்டிருந்தது. அது இந்துக்களுடைய பாடசாலை என்று அங்கே தூண்களில் பொறிக்கப்பட்டிருக்கும் சிலைகளிலிருந்து ஒருவர் முடிவுசெய்யலாம். 120 பிள்ளைகள் அடங்கிய அப்பாடசாலையில் சஞ்சியும் ஒருவனுகவேயிருந்தான். ஆனல், அவன்மற்றைய பிள்ளைகளைப்போல் இருக்கவில்லை. ஒட்டி உலர்ந்த உதரம், இடுப்பிலே கசக்கிக் கட்டின கந்தை. ஒரேவார்த்தையில் சொல்லப்புகின் அவன் வறுமையின் சின்னமாகவேயிருந்தான். ஆனல், அவனது முகம் பிரகாசமுடையதாயிருந்தது. இதற்குக் காரணம் அவன்கழுத்தில் தொங்கிய வெள்ளிக்குருசே. இதுவே அவன் ஒரு றோமான் கத்தோலிக்கன் என்பதை உறுதிப்படுத்திற்று.

சஞ்சி சூரியன் உதயமாகுமுன் நித்திரைவிட்டெழுவான். பாடுபட்டசுரூபத்தின்முன் முழந்தாட் படியிட்டுத் தன்னை ஒப்புக்கொடுப்பான். இறந்துபோன தன்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவான். தனக்கு நல்லபடிப்பையும் தன்தாய்க்குச் சுகத்தையும் கொடுக்கும்படி வேண்டுவான். காலைக்கடனை முடித்தபின் தன்அன்னை செய்த பாய், பெட்டி முதலியவற்றை எடுத்துக்கொண்டு தெருத்தெருவாய் அலைந்து விற்பான். விற்றபணம் கொண்டு அரிசிவாங்கிக் கஞ்சிகாய்ச்சி வயிற்றைக்கழுவிய பின்தான் பாடசாலைசெல்வான். பன்னங்கள்விலைப்படாவிட்டால் பசியுடனே பாடசாலைக்குப் போவான்.

காலை 8-30 மணிக்குப் பாடசாலை ஆரம்பமாகும். சஞ்சி 8-20 மணிக்குப் போய்விடுவான். அந்தப் பத்துநிமிஷங்களும் எங்கே செலவழிக்கிறன் தெரியுமா? பள்ளிக்கூடம் போகும்வழியிலே இருக்கும் அர்ச். அந்தோனியார்கோவிற் பீடத்தின் முன்தான். திருஇருதயநாதரின் திருப்பாதத்திலே தன்னை ஒப்படைத்துத் தான்பசியுடன் வந்ததையும், பட்ட கஷ்டங்களையும் அவர்பட்டபாடுடன் ஒப்புக்கொடுப்பான். தனது குருசைஎடுத்து அதில்தொங்கும் யேசுவை நோக்குவான். அவர்ஏன் இவ்வளவு பாடுபட்டார் என்று தனக்குள்ளே யோசிப்பான். சின்னயேசுவே, நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லபிள்ளையாக நடக்கச்செய்யுமென்று மன்றாடுவான். குருசைமுத்திசெய்வான்.

மணி அடித்ததும் தனக்குரிய ஒருகால் முரிந்த நாற்காலியில் உட்காருவான். வகுப்பிலேயுள்ள செல்வந்தரான மாணவர் இவனைப் புறக்கணித்து வந்தனர் அவனை அருகிலே நெருங்கவிடவில்லை. விட்டால் மரியாதைக்குறைவென எண்ணினர். ஆனால், சஞ்சி உபாத்தியாயர் சொல்வதை ஏற்றுக் கஷ்டப்பட்டுப் படித்துவந்தான். பிள்ளைகள் கூறும் வன்சொற்களைத் தான் அணிந்திருக்கும் குருசில்மரித்த ஆண்டவருக்காகப் பொறுத்துக்கொள்வான். குருசில் மற்றவர்கள் கைபடாதபடி கவனமாயிருப்பான்.

வருடமுடிவில் பாடசாலைக்கு வித்தியாதரிசிஒருவர் விஜயம் செய்தார். ஒவ்வொருவகுப்பையும் பரிசோதித்த வித்தியாதரிசி சஞ்சியின் வகுப்புக்கு வந்தார். வகுப்பில் பலகேள்விகள் கேட்டார். அவர்கள் ஒருவரும் சரியான பதில் சொல்லவில்லை. ஆனால், சஞ்சிமாத்திரம் விடையளித்தான். அவனின் விவேகத்தைக் கண்ணுற்ற வித்தியாதரிசி ஆச்சரியமுற்றார். அவனுடைய வீரத்தைப் பாராட்டி அவனுக்கு இலவசக்கல்வியளிக்கும்பொருட்டுச் சகலஏற்பாடுகளும் செய்தார். இதனைக்கண்ட ஏனையஆசிரியர்களும் மாணவர்களும் சஞ்சி எப்படி இந்நிலைக்கு வந்தான்என்று கேட்டனர். அதற்கவன் கழுத்திலே தொங்கிய வெள்ளிக்குருசைக் காட்டி: "இதுவே என்னை வெற்றிபெறச் செய்தது" என்றுகூறி அதை முத்தமிட்டான்.

ஆதலால் பிள்ளைகளாகிய நாமும் சஞ்சியைப்போன்று ஒவ்வோர் குருசுவைத் திருந்து அதற்குரிய வணக்கம் மரியாதை என்பனசெலுத்திப் பயபக்தியாய்க் குருசின்மேல் பற்றுவைப்போமாயின் எக்காரியத்திலும் முன்னேறுவோம் என்பது திண்ணம்.

சுபம்!

அருமைச் சகோதரங்களே!

இந்த விடுதலை காலத்தில் நீங்கள் நன்றாய் விளையாடுகிறீர்கள். இது தேகாப்பியாசத்திற்கும், மனதிற்கு நல்ல பராக்கைக் கொடுப்பதற்கும் உதவும். வெற்றி எடுக்கத்தான் நாம் விளையாடுகிறோம்.

ஆனால், தோல்வி அடைந்தால் அதைச்சந்தோஷமாய்அடைய அறிந்துகொள்ளுங்கள். சிலர் தோல்வியடைந்தால் சினப்பார்கள். எதிர்க்கட்சியுடன் சண்டையிடுவார்கள். பலரும் பங்குபற்றும் விளையாட்டில் தங்கள் கட்சியினர் தங்களைப்போல் திறமையாய் விளையாடாவிடின் கோபிப்பார்கள் அல்லது விளையாட்டை நிறுத்தி விடுவார்கள்.

நீங்கள் இப்படிச் செய்யாதீர்கள். விளையாட்டிலும் பிறர்சிநேகத்தை அனுசரிக்க வேண்டும். பொழுதுபோக்கிற்கும், பிறர்நலனுக்கும் உபயோகமாக வேண்டிய தருணம் பாவத்திற்குத் தருணமாகப் படாது. உதாரத்துடன் தோல்வியடையப் பழகுங்கள்.

வணக்கம்.

உங்கள் அன்புள்ள,
**அண்ணா.**

---

## அச்சா!

சில தேசங்களில் உத்தானத் திங்களில் மனைவிமார் புருஷன்மாரை அடிக்க உரிமையுண்டாம். உத்தானச் செவ்வாயில் புருஷன்மார் மனைவிமாரை அடிக்கலாமாம். அதுபோல மார்கழியில் வேலைக்காரர் தங்கள் எசமான் எசமாட்டிகளை ஏசுவார்களாம்.

புருஷன் மனைவிமார் இப்படிச் செய்வது "ஒருவரையொருவர் திருத்தக் கடமைப்பட்டவ" ரென்று அறியச் செய்வதற்குத்தானுமென்று ஒரு பழங்கதையுண்டாம்.

# மன்னிப்பு

ஒருமுறை அர்ச். பேதுருவானவர் யேசுநாதரிடம் வந்து, "எனது சகோதரனை நான் ஏழுமுறை மன்னித்தால் போதாதா?" என்றுகேட்டார். அதற்கு ஆண்டவர்: "ஏழுமுறை மாத்திரமல்ல ஏழு எழுபதுதரம் மன்னிக்கவேண்டும்" என்றார். அதனால் சிலர் நானூற்றித் தொண்ணூறுமுறை மன்னித்தால் போதுமென்று நினைக்கலாம். ஆண்டவர் சொன்னதன் அர்த்தம் நாம் எப்பொழுதும் மன்னிக்க வேண்டும் என்பதேயாகும்.

"மன்னிக்கும் மனப்பான்மை உடையவனே மனிதன்" என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். பழைய கதையொன்றில்: ஒரு சுண்டெலி செய்தகுற்றத்தை சிங்கம் மன்னித்ததாகவும், பின் அச்சுண்டெலி, அச்சிங்கத்தை வேறொரு தீங்கில் நின்று காப்பாற்றியதாகவும் படிக்கின்றோம். இக்கதை நமக்குப் படிப்பிப்பதும் மன்னிப்பேயாகும்.

ஒவ்வொரு முறையும் பரமண்டல மந்திரம் ஓதும்போது: "எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போல, எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும்" என்று வேண்டுகிறோம். அதாவது, ஒருவர் நமக்குச்செய்யுங் குற்றங்களை நாம் எப்படி மன்னிக்கிறோமோ அதுபோல் எங்கள் குற்றங்களையும் மன்னித்தருளும் என்பதாம். ஒருவர் நமக்குச்செய்யுங் குற்றங்களை மன்னிப்பதே, நாம் அவருக்குக்கொடுக்கும் தண்டனையாகும்.

ஒரு சந்நியாச மடத்தில் வயதுசென்ற ஒரு சந்நியாசியார் மரணப்படுக்கையில் கிடந்தார். அவரை வேறொரு சந்நியாசியார் அணுகி: "அன்பரே, நீர் இந்தமடத்தின் கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை, அப்படியிருந்தும் தேவனிடம் கணக்குக்கொடுக்கப்போகும் இந்நேரத்தில் பயப்படாமல் சந்தோஷமாக இருக்கிறீரே" என்றார். அதற்கு அந்தக் கிழச் சந்நியாசியார் கூறுவார்: "ஆம், அநேகமுறை தவறியிருக்கிறேன். ஆனால், ஒன்றுமட்டும் எனது நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. அதாவது, நான் இந்த மடத்தில் சீவித்தகாலத்தில் ஒருவர்எனக்கு எப்படிப்பட்டபிழையைச் செய்திருந்தாலும் மன்னித்திருக்கிறேன். அதுபோலக் கருணைநிறைந்த தேவனும் என்னைமன்னிப்பார்."

நாமும் பிறர்செய்த குற்றங்களை மன்னிப்போமாகில், தேவனும் நமதுகுற்றங்களை மன்னிப்பார் என்பதில் சந்தேகம் இல்லை. — வே. சாமுவேல்.

## யேசுவின் உத்தானம்

—: எஸ். பர்னபாஸ் :—

— 1 —

எங்கும் குதூகல சந்தோஷம்
இன்று யேசுவின் உத்தானம்
பொங்கும் மங்கள ஒலிநாதம்
போற்றிப் புகழ்வோம் அவர்பாதம்

— 2 —

திருவுளம் பற்றிய உரையெனவே
திரிதினங் தனிலே உயிர்த்தாரே
மரியனை தாயொடு மைந்தர்களும்
மகிழ்வோம் மகிழ்வோம் மிகவாக

— 3 —

அட்சயம் இலகு சூட்சம் ஒளி
அணியாம் சதுர்க்குணம் அமைவாக
அட்சர ஐந்து காயமுடன்
அமலன் உயிர்த்தார் ஜெயமாக

— 4 —

திருச்சபை வெற்றித் திருநாளே
திகழ்முடி போலும் பெருநாளே
ஒருநாள் மரித்து உயிர்த்தருளும்
உயர்ந்த பாடம் தருநாளே

— 5 —

ஜெயஜெய வாழ்த்துப் பாடிடுவோம்
யேசுவின் பாதம் நாடிடுவோம்
பயமெனும் இருளகன் றேடிடவே
பணிவாய் அவர்தயை வேண்டிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org